# நோக்கு

ஜனவரி 26, 2024

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்



## அன்ரன் மாஸ்டர் பேசுகிறார்

### மாத்தையாவின் கதை:

புலிகள் அமைப்பில் அரசியல், அதிகாரப் போட்டி இன்னும் பல

### ஷேக் ஹசீனா:

வீழ்த்த முடியாத வங்கத்தின் இரும்பு பெண்மணி!

# உள்ளடக்கம்


**03** வற் வரி அதிகரிப்பும் மக்கள் பாடும்

**06** அன்ரன் மாஸ்டர் பேசுகிறார்

---

**23** ஷேக் ஹசீனா

**28** மாத்தையாவின் கதை பாகம்–1

---

**44** பாடசாலையை விட்டு வெளியே வாருங்கள்

**48** பிரசாரத்துக்கு அப்பால்


---








# வற் வரி அதிகரிப்பும், மக்கள் பாடும்!

நமது நிருபர்

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம், பெறுமதி சேர் வரி (வற் வரி), 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரித்துள்ளது. அன்றுமுதல், இதுவரை வற் வரிக்கு உட்படுத்தப்பட்டிராத சுமார் 250 பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிதாக பலர் வற் வரி வரம்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

வற் வரி அதிகரிப்பினால், மக்களின் வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது. டீசல், பெட்ரோல் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவை வற் வரி வரம்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால், சங்கிலி தொடராக அனைத்து பொருட்களுக்குமான விலைகளும் சிறிதளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. பஸ், புகையிரத டிக்கெட் கட்டணங்களில் தொடங்கி, தேநீர் விலை (5 ரூபாவாலும்), உணவு பொதிகளின் விலை (சைவ உணவுப் பொதி ஒன்றின் விலை 25 ரூபாவாலும்) அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். மேலும், மின்சார கட்டணமும், நீர் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வற் வரி அதிகரிப்பினால், தொலைபேசி கட்டணங்கள், இணைய சேவை கட்டணங்கள் உள்ளிட்ட தொலைத்தொடர்பு சேவைகளின் கட்டணங்களும் அதிகரித்துள்ளது. உள்நாட்டு தொலைபேசி அழைப்புக்கள், SMS சேவைகள் உள்ளிட்ட மேலதிக சேவைகள் மற்றும் Pay TV சேவை ஆகியவற்றுக்கு 42.02 வீதத்தினால் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. Data, Wi-Fi சேவை மற்றும் சர்வதேச தொலைபேசி அழைப்புக்களுக்கான கட்டணங்கள் 23.50 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. வரி அதிகரிப்பு காரணமாக, ஜனவரி 1 ஆம் திகதி முதல், கையடக்கத் தொலைபேசிகளின் விலை 35 சத வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தன. இந்நிலையில், வரி அதிகரிப்பாலும், அதைத் தொடர்ந்த வாழ்க்கை செலவு அதிகரிப்பாலும் மக்கள் 2024ம் ஆண்டு மேலும் வறுமை நிலைமையை நோக்கி நகர்வதுடன், அவர்களின் கடன் சுமை மேலும் அதிகரிக்கும் என்று பொருளாதார நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த ஆண்டுகளில் மக்களின் வாழ்க்கை செலவீனம் அதிகரித்த அளவுக்கு மக்களின் வருமானம் அதிகரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வீட்டு வாடகை, நீர், மின்சார, எரிபொருள், தொலைத்தொடர்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உட்கொள்வதே வறிய, நடுத்தர வர்க்க மக்களுக்கு நிகழாண்டில் சவாலாக அமையும் என அவர்கள் தெரிவித்தனர்.

2022ம் ஆண்டு தொடக்கத்தில், 22-25 ரூபாவாக காணப்பட்ட உள்நாட்டு முட்டையின் விலை, தற்போது 50-60 ரூபாயாக உயர்ந்துள்ளது. வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளதால், ஆரோக்கியமான உணவுகளை




உண்பதற்கு பதிலாக, பசியை போக்கும் உணவுகளை மாத்திரம் மக்கள் உட்கொள்ள முயற்சிப்பதாக பொருளாதார நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் போக்கால், சிறுவர்கள், பெண் பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்து தொடர்பான பாரிய பாதிப்புக்கள் ஏற்படும்.

இந்நிலையில், வற் வரி அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள, வாழ்க்கை செலவு அதிகரிப்பை ஈடு கட்டும் வகையிலான திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும், வறிய, நடுத்தரவர்க்க மக்களுக்கு ஊட்டச்சத்தான உணவுகள் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பொது ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். மேலும், வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கு இணையாக சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன.

# விடுதலைப் புலிகள் அமைப்புக்குள்:
# அன்ரன் மாஸ்டருடன் ஓர் உரையாடல்




**(அன்ரன் மாஸ்டரின் கட்டுரை தொடர்பாக, ஜப்னா மொனிட்டரில் வெளியான ஆசிரியர் குறிப்பின் தமிழ் ஆக்கம்)**

அன்ரன் மாஸ்டர் என்று அழைக்கப்படும் கே.டி.சிவகுமார், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவர். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய நண்பர், இவர் விடுதலைப் புலிகள் அமைப்பு ஒற்றை தலைமை யுடனான ஓர் இயக்கமாக மாறுவதற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். (அதாவது, அந்த அமைப்பு அத்தகைய கட்டமைப்பைக் கொண்டிருந்தது.) அவர் விடுதலைப் புலிகளின் ராணுவ அலுவலகத்தின் (எம்.ஓ.) தலைவராகப் பணியாற்றினார்.

விடுதலைப் புலிகளின் ராணுவப் பிரிவை வலிமை மிக்க போர்ப் படையாக மாற்றியதில் இவரது பங்கு முக்கியமா னது. பூடான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற இரண்டு சமாதானப் பேச்சு

வார்த்தைகளில் லோறன்ஸ் திலகருடன் இணைந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக அன்ரன் பங்கேற்றார்.

1988 ஆம் ஆண்டு, இந்திய அமைதிப் படை இலங்கையில் இருந்தபோது, பிரபாகரனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, அன்ரன் மாஸ்டர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறினார். கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக இவர், விடுதலைப் புலிகள் அமைப்புடனோ, வேறு எவ்வித அரசியல் நடவடிக்கைக ளிலோ ஈடுபடாமல் இருந்து வருகிறார். அவருடன் தொடர்பு கொள்ள நான் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியைத் தொடர்ந்து, மேற்கொண்ட உரையாடல் மூலம் இந்த கதை உருவானது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்து அவர் எதிர்மறையான கருத்து களைக் கூற விரும்பவில்லை. அவர், தனது முக்கியமான கால கட்டத்தை அந்த அமைப்பில் கழித்துள்ளார். மேலும், ஒரு காலத்தில் பிரபாகரனின் நெருங்கிய நண்பராக இருந்ததால், அவர் குறித்து எதிர்மறை கருத்துகளைக் கூற முன்வரவில்லை. எல்.டி.டி.இ. சகாப்தம் தனது வாழ்க்கையில் ஒரு முடிந்துபோன அத்தியாயம் என்றும், மீண்டும் படிக்க விரும்பாத அத்தியாயம் என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

ஆயினும் கூட, பெரும் வற்புறுத்தலுக்குப் பிறகு, அவர் என்னுடன் உரையாடல் மேற்கொள்ள ஒத்துக் கொண்டார். எல்.டி.டி.இ.தலைமையின் கடந்த காலத் தவறுகளில் இருந்து எதிர்கால சந்ததியினர் பாடம் கற்க வேண்டும் என்ற நம்பிக்கையே அவரது விருப்பம் எனத் தெரிகிறது.

2009-ல் விடுதலைப் புலிகளின் ராணுவம் தோல்வியுற்றதில் வியப்பு எது வும் இல்லை என்று அவர் தெரிவிக்கிறார். அவர்களது வீழ்ச்சியா னது முன்னரே தொடங்கி விட்டது. குறிப்பாக, 1988இல் இந்தியா ஏற்பாடு செய்திருந்த இடைக்கால அரசாங்கத் தீர்வுக்கான சாத்தியத்தை அந்த அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நிராகரித்தபோதே வீழ்ச்சியானது தொடங்கி விட்டது என்கிறார்.

அன்ரன் மாஸ்டர் நேர்காணல் என அழைக்க விரும்பவில்லை. மாறாக அதை ஓர் உரையாடல் என அழைக்க விரும்புகிறார். அவருடன் நான் மேற்கொண்ட உரையாடல் இதோ. நாங்கள் இந்த உரையாடலை இரண்டு பகுதிகளாக வழங்குகிறோம்.

ஆசிரியர்
ஜப்னா மொனிட்டர்



இடமிருந்து வலமாக: தினேஷ் மாஸ்டர்,
கிட்டு, அன்டன் மாஸ்டர் மற்றும் ரஹீம். 1988.

# அன்ரன் மாஸ்டர் பேசுகிறார்

விடுதலைப் புலிகளின் முன்னாள் ராணுவ அலுவலகத்தின் தலைவர் அன்ரன் மாஸ்டர். இவர் 'ஜப்னா மொனிட்டர்' ஆசிரியர் கனியன் பூங்குன்றனுடன் மேற்கொண்ட விரிவான உரையாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு.


பகுதி 01

## தொடக்க நாட்கள் மற்றும் ஆரம்ப காலச் செயல்பாடுகள்

BY:
**Kaniyan Pungundran**
கணியன் பூங்குன்றன்

மொழிபெயர்ப்பு: **பா.ராஜா**

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினரான பொன்னம்மான், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நாங்கள் படித்த காலத்தில் இருந்தே நெருங்கிய நண்பர். ஆரம்பத்தில் கல்லூரியில் நிகழ்ந்த மோதலில் தொடங்கிய எங்கள் நட்பானது, நாளடைவில் வலுப்பெற்றது. 1973 ஆம் ஆண்டு பொன்னம்மான், சேரா, தவா மற்றும் சிலருடன்



அன்ரன் மாஸ்டர் (முன்வரிசை- இடமிருந்து நான்காவது) மற்றும் பொன்னம்மன் (பின்வரிசை- இடமிருந்து நான்காவது) பள்ளித் தோழர்களுடன், 1970களின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்

சேர்ந்து, விடுதலை முயற்சிகளுக்குப் பயன்படக் கூடியவற்றை மேம்படுத்தும் லட்சியத் திட்டங்களுடன், “விஞ்ஞான முயற்சி சங்கம்” (Try Science Association) என்ற குழுவை உருவாக்கினோம்.



பிரபாகரனும் பொன்னம்மானும்

எங்களது முக்கியமான திட்டங்களில் ஒன்று புரோட்டோடைப் பைபிளேனை (இலகுரக விமானம்) உருவாக்குவது. ஒரு புரெப்பல்லர் உள்பட அடிப்படைக் கட்டமைப்பையும், வெளிக் கட்டமைப்பை யும் உருவாக்கினோம். நிதிப் பிரச்சினை காரணமாக, இந்தத் திட்டம் துரதிருஷ்ட வசமாக நிறுத்தப்பட்டது. மேலும், குழு உறுப்பினர்கள் பல்கலைக்கழகக் கல்வியைத்

தொடர்ந்ததாலும், வெளிநாடுகளுக்குச் சென்றதாலும் அந்தக் குழு கலைக்கப்பட்டது.

## பிரபாகரன் அறிமுகம் மற்றும் சிந்தனை வேறுபாடுகள்



இளவயது பிரபாகரன்

1977-ம் ஆண்டு யாழ் பொது நூலக உசாத்துணைப் பிரிவில், நான் வழக்கமாகச் சந்திக்கும் குமணன் (ஏ) குமணசாமி என்னை பிரபாகரனுக்கு அறிமுகப்படுத்தினார். இவரது சகோதரர் ஏற்கெனவே விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தார். எல்.டி.டி.இ.யிலிருந்து பிரிந்து, தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (பிளாட்) என்ற அமைப்பை உருவாக்கிய 13 உறுப்பினர்களில் குமணனும் ஒருவர்.

## உலகளாவிய பயங்கரவாதம் மற்றும் பிரபாகரனின் நிலைப்பாடு

1970-களில் உலகம் முழுவதும் பயங்கரவாத நடவடிக்கைகள் உச்சத்தில் இருந்தன. பாலஸ்தீன விடுதலை அமைப்பு (பி.எல்.ஓ.), பிளாக் செப்டம்பர் அமைப்பு (பி.எஸ்.ஓ.), பாலஸ்தீன



பாலஸ்தீனிய போராளிகள், 1970



ஜப்பானிய சிவப்பு ராணுவத்தின் தலைவர் Fusako Shigenobu- 1972 இல்.

விடுதலைக்கான பாப்புலர் ஃப்ரண்ட் (பி.எஃப்.எல்.பி.), ஜப்பானிய செம்படை (ஜே.ஆர்.ஏ), பாலஸ்தீன விடுதலை முன்னணி (பி.எல்.எஃப்) போன்ற பல பாலஸ்தீன போராளிக் குழுக்களால் பயங்கரவாக நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் அதிகரித்தன. அவர்கள் விமானங்களைக் கடத்துதல், பொது இடங்களில் குண்டுவீசுதல், பொதுமக்களைக் கடத்துதல், கொலை செய்தல் மற்றும் விளையாட்டுப் பிரமுகர்களைக் குறி வைத்தல் உள்ளிட்ட பல பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்தச் செயல்கள் உலக அளவில் பயங்கரவாதச் செயல்களாகக் கண்டிக்கப்பட்டன. பாலஸ்தீனக் குழுக்களின் பயங்கரவாத நடவடிக்கைகளால் பிரபாகரன் ஈர்க்கப்பட்டு இருக்க வேண்டும். முதன்முறையாக அவரைச் சந்தித்தபோது, ‘பயங்கரவாதத்தின் மூலம் மட்டுமே விடுதலையை அடைய முடியும்’ என்றார். இந்த வாசகம் என்னை மிகவும் பாதித்தது. தேச விடுதலைக்கான நமது வேட்கைக்கு பயங்கரவாதம் உதவாது என்று நான் எதிர்த்தேன். பாலஸ்தீன இயக்கத்தின் பயங்கரவாதச் செயல்கள் உண்மையில் உலகெங்கிலும் உள்ள அனைத்து விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளுக்கும் அவப் பெயரை ஏற்படுத்தி இருந்தன. இந்த நடவடிக்கைகள் உலகளவில் விடுதலை இயக்கங்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியதுடன், உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையிலான வேறுபாட்டை குறைத்தது.

## பிரபாகரனின் குணநலன் மற்றும் தலைமைப் பண்பு

1977 ஆம் ஆண்டு, அப்போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பில் நான் இணைந்து கொள்ளவில்லை. எங்கள் சந்திப்புகள் பொதுவாக கோயில்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் நூலகங்கள் போன்ற பொது இடங்களில் நடக்கும். பேருந்து நிலையத்தில் நாங்கள் சந்திக்கும்போது, பிரபாகரன் சைக்கிளில் வந்து என்னையும் அழைத்துச் செல்வார். நாங்கள் பேசிக்



போரால் அழிந்த ரீகல் திரையரங்கம்


சிறுவயது பிரபாகரன்

கொண்டே சைக்கிளில் செல்வோம். இக்காலப்பகுதியில், பிரபாகரனுக்கும் எனக்குமான நெருக்கம் அதிகரித்தது. தனது கைத்துப்பாக்கியை எனது வீட்டில் வைத்துவிட்டுச் செல்லும் அளவுக்கு அவர் என்னை நம்பினார்.

## வரலாற்றுக் கதாபாத்திரங்கள் குறித்த பிரபாகரனின் அபிமானம்

பிரபாகரனிடம் ஒரு பாராட்டத்தக்க குணம் இருந்தது: கற்கும் ஆர்வமும், வாசிப்பதில் ஆழ்ந்த ஆர்வமும் அவரிடம் இருந்தது. அவர் பகத் சிங், வீரபாண்டியக் கட்டப்பொம்மன் மற்றும் சுபாஷ் சந்திர போஸ் ஆகியோரால் ஈர்க்கப்பட்டார் அவர்களை தனது முன்மாதிரியாகவும் கருதினார். வீரபாண்டியக் கட்டப்பொம்மன் மீது அவருக்கு தனி அபிமானம் இருந்தது. ஆனால், நான் எப்போதும் கட்டப்பொம்மனை விவேகமற்றவனாகவே பார்த்தேன். ஆங்கிலேயரின் வரிக் கோரிக்கையை மீறி வீரவசனம் பேசி மரண



பகத்சிங்




வீரபாண்டிய கட்டபொம்மன்



நேதாஜி சுபாஸ் சந்திர போஸ்

தண்டனையை எதிர்கொள்வதை விட, படைகளை மீண்டும் ஒருங்கிணைத்து போராட்டத்தைத் தொடர்வதே உண்மையான துணிச்சலாக இருந்திருக்கும் என்று பிரபாகரனுடன் நான் அடிக்கடி விவாதித்தேன். ஆனால், இந்தக் கருத்தை பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தியாகத்தின் உன்னதத்தையும் போர்க் களத்தில் இறந்து போவதையும் உணர்வுப் பூர்வமாக நம்பினார். தமிழ் வரலாற்றில் வீரபாண்டியக் கட்டப்பொம்மனுக்கு நிகரான ஒரு வீரனாக நினைவுகூரப்பட வேண்டும் என்று பிரபாகரன் விரும்பினார்.

1987-ல் இந்திய ராணுவம் இலங்கைக்கு வந்த பிறகு, பிரபாகரன் என்னிடம் “ஓர் இனம் சுதந்திரத்துக்காகப் போராடி அழிந்து போவதில் தவறில்லை” என்று பலமுறை சொன்னார். இது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நாம் வாழப் போராடுகிறோமா அல்லது நம் இனத்தையும் நம்மையும் அழிப்பதற்கா கவா போராடுகிறோமா என அவருடன் நான் வாதிட்டேன்.

ஓர் இனம் தனது சுதந்திரத்துக்காக அழிந்து போகலாம் என்ற அவரது நம்பிக்கை இறுதி வரை நீடித்தது. விடுதலைப் போராட்டத்தை நிலை நிறுத்துவது, மக்கள் உயிர் வாழ்வதை உறுதி செய்வது பற்றிய சிந்தனைகள் அவருக்கு இல்லை. அவர் தம் ஆரம்ப காலத்தில் படித்த தமிழ் இலக்கிய நூல்கள், அவரது மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நூல்கள் போரில் இறப்பதை மகிமைப்படுத்தின, அது அவரது சிந்தனையில் எதிரொலித்தது.

1970 மற்றும் 80-களில் பிரபாகரனும் மற்ற விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்களும், நானும் யாழ்ப்பாணத்தில் உள்ள ரீகல், றியோ திரையரங்குகளுக்கு முதல்,

இரண்டாவது காட்சி படம் பார்ப்பதற்காக அடிக்கடி சென்றோம். போர், வரலாறு, மேற்கத்திய நாடுகள் மற்றும் சட்டம்–ஒழுங்கு தொடர்பான திரைப்படங்களைப் பார்ப்பதில் எங்களுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. இலங்கையைப் பொருத்தவரையில், ஹாலிவுட் திரைப் படங்கள் பெரும்பாலும் தாமதமாகவே வந்தடையும். யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு முன் கொழும்பில் திரையிடப்படும்.



பிரபாகரன் நல்ல பல குணங்களைக் கொண்டிருந்தார். அவர் நடத்தையில் கண்ணியமானவர். நான் அவரை ஓர் உண்மையான கனவானாகவே கருதுகிறேன். அவர் யாரையும் திட்டியதையோ, கடுமையாக



பொன்னம்மானுடன் புலிகளின் அணிவகுப்பை பார்வையிடும் பிரபாகரன்




1987 இல் நாவற்குழி வெடிவிபத்தில் உயிரிழந்த பொன்னம்மான் உள்பட விடுதலைப் புலிகளை கௌரவிக்கும் நினைவுச் சுவரொட்டி.

விமர்சிப்பதையோ நான் கேட்டதில்லை. இருப்பினும், அவரிடம் பிடிவாதக் குணம் இருந்தது. " தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்" என்ற பழமொழியைப் போலவே, வளைந்து கொடுக்க முடியாத நம்பிக்கைகளைக் கடைப்பிடித்தார். மாறுபட்ட கருத்துகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. காலப்போக்கில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்காதவர்கள் துரோகிகள் என்ற நம்பிக்கையை அவர் வளர்த்துக் கொண்டார். துவக்கத்தில், தோழமை குணம் கொண்ட விடுதலைப் போராளியாக இருந்த பிரபாகரன், படிப்படியாக தனது சர்வாதிகார முடிவுகளை நம்பினார். பிரபாகரன் மீண்டும் மீண்டும் விட்ட பிழைகள், அவர் மீண்டும் மீண்டும் எடுத்த தவறான முடிவுகள், அவருடைய வியூகத்தில் இருந்த தொடர்ச்சியான தவறுகள் என்பன பல இளம் உயிர்கள் மற்றும் பொதுமக்களின் தேவையற்ற இழப்புக்கு வழிவகுத்தது. பிரபாகரனால் ஆயிரக்கணக்கானோர் ஊனமுற்றனர், காயமுற்றனர். இவையெல்லாம் தவிர்த்திருக்கக்கூடிய துயரங்கள். சிங்கள மக்களும் உயிர் இழப்புகளையும், பெருமளவில் துன்பங்களையும் அனுபவித்தனர் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு தனி மனிதனாக, பிரபாகரனுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அறிவும், தொலைநோக்குக் குறைபாடும் இருந்தது. என் கருத்துப்படி, அவர் சிறந்த தலைவராக இருக்கவில்லை. உண்மையான தலைமை என்பது மகத்தான பொறுப்பைக் கொண்டுள்ளது. குறிப்பாக, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தலைமையை நம்பி, தங்கள் உயிரை தியாகம் செய்து, ஒரு போராட்டத்தில் ஈடுபடும்போது, அதை வழிநடத்தும் தலைமைக்கு பெரும் பொறுப்பு இருந்தது. ஆனால், பிரபாகரன் இந்த முக்கிய பொறுப்பை நிறைவேற்றத் தவறி விட்டார். இதுவே அவர் மீது நான் வைக்கும் மிக முக்கியமான விமர்சனமாகும்.

### பிரபாகரனின் இனவெறி

1978-ஆம் ஆண்டில் பொன்னம்மா னின் வீட்டில் அவரது அறையில் பிரபாகரனுடன் இருந்தேன். விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான ராகவன், செல்லக்கிளி ஆகியோரும் உடனிருந்தனர். எனினும், பொன்னம்மான் அங்கு இருக்கவில்லை. நாங்கள் அரசியல் தொடர்பாக விவாதித்தோம். அதன்போது ஒரு கடுமையான கருத்தை செல்லக்கிளி தெரிவித்தார். அதாவது, “சிங்களக் குழந்தைகளைக் கூட விடக் கூடாது. அவர்களையும் கொல்ல வேண்டும். அவர்கள் வளர்ந்து தமிழர்களைக் கொல் வார்கள். அவர்களை குழந்தைகளாக இருக்கும்போதே கொல்வது நல்லது” என்றார். இந்தக் கருத்தானது எனக்கு கவலையை ஏற்படுத்தியது. எல்.டி.டி.இ. அமைப்புக்குள் தொழில்நுட்ப அறிவால் பெயர் பெற்ற செல்லக்கிளி, அத்தகைய தீவிரமான நிலைப்பாட்டை கூறியது திகைப்பூட்டும் வகையில் இருந்தது.

இத்தகைய நடவடிக்கைகள் கேவலமா னவை என்று நான் வாதிட்டேன் அத்தகைய எண்ணங்களை ஊக்கப்படுத்தக் கூடாது என்றேன். ஆனால், எனக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில், செல்லக்கிளியின் கருத்தை ஆதரித்த பிரபாகரன், “அந்தக் குழந்தைகள் தமிழர்களைக் கொல்லும் அளவுக்கு வளர்வார்கள். எனவே, இப்போதே அவர்களைக் கொல்வதில் தவறில்லை” என்று குறிப்பிட்டார். இந்த நிலைப்பாடு என்னை ஆழ்ந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்கியது. வாக்குவாதம் வலுத்ததால், பிரபாகரனும் செல்லக்கிளியும் வெளியேறினர். ஆனால், ராகவன் உடனிருந்தார். அவர் எனது கருத்தை ஆதரிப்பார் என்ற எனது எதிர்பார்ப்புக்கு மாறாக, சிங்களக் குழந்தைகளைக் கொல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, செல்லக்கிளியுடன் கருத்துடன் அவர் உடன்பட்டார். இந்த விஷயத்தில் ராகவனின் மனப்போக்கு எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

1978-ல் இயக்கத்தில் சேர்ந்த பிறகு, 1983-ல், இந்தியாவில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்களின் பொறுப்பாளராக, எனது பள்ளித் தோழர்

பொன்னம்மான் நியமிக்கப்பட்டார். நான் தமிழ்நாட்டில் மேட்டூரில் ஆறாவது அணியின் பயிற்சி முகாமில் இருந்தபோது ஒரு குறிப்பிட்ட சம்பவம் நினைவுக்கு வருகிறது. எனது புரோட்டோடைப் மேம்படுத்தப்பட்ட சாதனங்களை (ஒரு கிளைமோர் மைன் மற்றும் அன்டி-டேங்க் மைன், அதற்கு நான், 'பன்றிக்குட்டி' என்று பெயரிட்டேன். இது வடிவ சார்ஜ் கருத்தின் (Shaped Charge Concept) அடிப்படையில் வடிவமைக்கப்பட்டது) சோதனை செய்ய நான் ராணுவ அலுவலகத்திலிருந்து அந்த முகாமுக்கு சென்றேன். அச் சமயத்தில் பொன்னம்மான் முகாமில் இருக்கவில்லை.

முகாமில், ஒரு மூலையில் இருந்து தொடர்ச்சியாக அழுகுரல் கேட்டுக் கொண்டிருந்தது. இதுகுறித்து விசாரித்த போது, முகாமை நடத்திய உறுப்பினர்க ளால் கயிற்றால் கட்டப்பட்டு ஓர் இளைஞன் கொடூரமாக தாக்கப்பட்டதைக் கண்டேன். மனிதாபிமானமற்ற இந்தத் தண்டனையைப் பற்றி நான் கேட்ட போது, முகாமில் இருந்து அந்த இளைஞன் தப்பிக்க முயன்றதற்காகவும் அதனால் அவர் தண்டிக்கப்படுகிறார் என்றும் கூறினர். அவர்கள் மேலும் அடிப்பதை நிறுத்திவிட்டு, அவரைக் கட்டியிருந்த கயிற்றை அகற்றினேன். பல மாதங்களுக்குப் பிறகு, அந்த இளைஞனுக்கு இலங்கைக்கு படகில் அழைத்து செல்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு படகில் ஏற்றி நடுக்கடலில் கொண்டு செல்லப்பட்டு அங்கே சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை அறிந்தேன். இந்தச் செயல் எனக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. பொன்னம்மானுக்கும் பிரபாகரனுக்கும் தெரியாமல் இந்தக் கொலை நடந்திருக்காது. பொன்னம்மான் என் அருமை நண்பர் அதில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. இருப்பினும், இந்த கொடூரமான குற்றத்துக்கு அவர் எப்படி உடந்தையாக இருக்க முடியும் என்ற எண்ணத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்கு அது வருத்தத்தை ஏற்படுத்தியது. நான் அவர் மீது கோபமாக இருந்தேன். அவருக்கு கர்மவினை பாடம் புகட்டும் என கோபத்தில் நினைத்தேன். இறுதியில் யாழ்ப்பாணம் நாவற்குழியில் விடுதலைப் புலிகளின் வெடிபொருள் ஏற்றிச் செல்லும் வாகனத்தில் வெடிமருந்து நிரப்பும் போது வெடித்ததில், பொன்னம்மான் உயிரிழந்தார்.

## அனுராதபுர படுகொலைகளும் அதன் அரசியலும்

1985 ஆம் ஆண்டு மே மாதம், 14ஆம் திகதி அன்று அனுராதபுரத்தில் 146 அப்பாவி சிங்களப் பொதுமக்கள் படு கொலை செய்யப்பட்டதை அறிந்தபோது, நான் முற்றிலும் பாதிக்கப்பட்டேன். வல்வெட்டித்துறையில் இலங்கை ராணுவம் நடத்திய படுகொலைகளுக்குப் பழிவாங்கும் நோக்கில் இந்த கொலை கள் நடந்ததாக சிலர் வாதிட்டனர்.



உண்ணாவிரத மேடையில் திலீபன்

ஆனால், இரு தவறுகள் ஒரு தவறை சரி செய்துவிடாது. இதனால் எதுவும் சரியாகி விடாது. இந்தப் படுகொலை, போர்க் குற்றம் என்பதுடன் அவை மனித குலத்துக்கு எதிரான குற்றமாகும். இந்தக் கொலைக்குப் பின்னால், சொல்வதற்கு ஒரு கதை இருக்கிறது.

## 'றோ' [RAW] வுடன் சந்திப்பு

1983 ஆம் ஆண்டு ஜ"லை மாதம் இலங்கையில் இனக் கலவரம் நிகழ்ந்தபோது, நான் புதுச்சேரியில் (பாண்டிச்சேரி) இருந்தேன். அப்போது, புதுச்சேரியில் 'றோ' (RAW -Research and Analysis Wing) பிரிவு தலைவர் என்னைத் தொடர்பு கொண்டார். பின்னர், பிரபாகரன் இந்தியா வந்தபோது, சென்னையில் உள்ள 'றோ' நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தினார். அதன் பிறகு, எனது தொடர்பை முறித்துக் கொள்ள முடிவு செய்தேன். ஆனால், பிரபாகரன் என்னை தொடரச் சொன்னார். நான் விடுதலைப் புலிகளை விட்டு வெளியேறும் வரை தொடர்பில் இருந்தேன். நான் அடிக்கடி புதுச்சேரிக்குப் பயணித்து, பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேசுவேன். ஒரு கட்டத்தில், 'றோ' அதிகாரி, சிங்களப் பொதுமக்களை புலிகள் கொன்று குவிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். நான் கோபமடைந்து இந்த யோசனையை மறுத்தேன். எங்கள் போராட்டம் சிங்கள பேரினவாத ஆட்சிக்கு எதிரானது, சிங்களப் பொதுமக்களுக்கு எதிரானது அல்ல என்றேன். சென்னையில் நான் பிரபாகரனைச் சந்தித்து, இந்த



விவகாரம் குறித்து சொன்னபோது, 'றோ' அதிகாரியொருவர் அவரிடமும் இதுபோன்ற கோரிக்கைகளை முன்வைத்ததாக பிரபாகரன் என்னிடம் தெரிவித்தார்.

எங்கள் உரையாடல் நடந்து முடிந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அனுராதபுரம் படுகொலை நடந்தது. இந்தக் கொலைகளில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பில்லை என்று மறுப்பு அறிக்கை ஒன்றை புலிகளின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டார். 'றோ' அதிகாரியுடனான எனது அடுத்த சந்திப்பின்போது, அனுராதபுர படுகொலைகளுக்காக அவர் என்னை வாழ்த்தினார். இது எனக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியது: ஒன்று, உண்மையிலேயே படுகொலை நடக்க வேண்டும் என்று 'றோ' விரும்பியிருக்க வேண்டும். அல்லது புலிகளைப் புரிந்து கொள்ள அவர்கள் மதிப்பீடு செய்திருக்க வேண்டும். இச் சம்பவத்தைத் தொடர்ந்து, அவர்கள் விடுதலைப் புலிகளை மறுமதிப்பீடு செய்திருக்க வேண்டும் அல்லது உண்மையாகவே வாழ்த்துகளைத் தெரிவித்திருக்க வேண்டும். அவர்களின் உண்மையான நோக்கத்தை என்னால் உறுதியாக தீர்மானிக்க முடியவில்லை.

இருப்பினும், இந்த விஷயத்தை நான் மேலும் ஆராயவில்லை. அந்த நேரத்தில் நான் ராணுவ அலுவலகத்தில், ராணுவ வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தேன். அனுராதபுரம் கொலை சம்பவம் நடந்த சிறிது காலத்துக் குள்ளேயே, இலங்கை அரசுக்கும் போராளிக் குழுக்களுக்கும் முதல் திம்பு பேச்சுவார்த்தை தொடங்கியது. எனது ராணுவ அலுவலகத்தில் பணியாற்றிய

லோறன்ஸ் திலகருடன் இணைந்து இந்தப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக கலந்து கொள்ளுமாறு பிரபாகரன் என்னைப் பணித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, அனுராதபுரம் கொலைகளில் பங்கு கொண்ட இரண்டு அல்லது மூன்று விடுதலைப் புலிகள் தாங்கள் தாக்குதலை நடத்தியதாகவும், தாங்கள் எவ்வாறு தப்பிச் சென்றோம் என்றும் என்னிடம் தெரிவித்தனர். அப்பாவி சிங்கள மக்கள் கொல்லப்படுவதை நான் எப்போதும் கடுமையாக எதிர்த்து வந்துள்ளேன். அப்போது விடுதலைப் புலிகளின் திருகோணமலைப் பொறுப்பாளராக இருந்த புலேந்திரன் சிங்களப் பொதுமக்களைக் கொலை செய்வதாக இலங்கை ஊடகங்களில் செய்திகள் பார்த்தேன். யாழ்ப்பாணத்தில் புலேந்திரனை சந்தித்தபோது, நான் புலேந்திரனிடம் இதுகுறித்து கேள்வி எழுப்பினேன். சிங்கள பொதுமக்களை கொலை செய்வதை நான் பார்த்தால், அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்வேன் என்று கடுமையாக எச்சரித்தேன். 1970-களின் பிற்பகுதியில் திருகோணமலையில் இருந்தபோது, புலிகள் அமைப்புக்கு ஆள் சேர்ப்பதற்காக புலேந்திரன் மற்றும் சீலன் ஆகிய இருவரையும் நேர்காணல் செய்தேன். நான் சீலனை புதிய உறுப்பினராகத் தேர்வு செய்தேன். ஆனால், புலேந்திரனின் முதிர்ச்சியின்மை காரணமாக நான் அவரை நிறுத்தி வைத்திருந்தேன். நான் தீர்மானித்த போதிலும், பிற்காலத்தில் வேறு யாரோ அவரை விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்த்துக் கொண்டனர்.

## இந்திய ராணுவத்தின் வருகை, திலீபனின் உண்ணாவிரதம்

இந்திய ராணுவம் இலங்கை வந்தடைந்த போது, தமிழ் மக்கள் மாலைகள், மேளம் முழங்க அவர்களை வரவேற்றனர். இந்திய ராணுவத்தை புலிகள் தாக்கி னால், மக்களே புலிகளுக்கு பதிலடி கொடுக்கும் அளவுக்கு இந்திய ராணுவ த்துக்கும் யாழ்ப்பாண மக்களுக்கும் இடையிலான உறவு ஆரம்பத்தில் சுமூகமாகவே இருந்தது. இந்த நட்புறவை சீர்குலைக்க பிரபாகரன் விரும்பினார்.

இந்தியாவின் மீது நம்பிக்கை வைத்து நாங்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு இந்தியாவுக்கு இல்லை. இலக்கு தமிழ் ஈழமாக இருந்தாலும் சரி, கூட்டாட்சியாக இருந்தாலும் சரி, முழுமையான ராணுவ வெற்றியை அடைய முடியாது என்பதே யதார்த்த உண்மை. இறுதியில், அனைவரும் பேச்சுவார்த்தை மேசைக்கு வர

வேண்டும். மேற்கத்திய சக்திகளும் சோவியத் கூட்டமைப்பும் இலங்கையைக் கையாள்வதில், இந்தியாவுக்கு சுதந்திரமான போக்கை அனுமதித்தன. இந்த உண்மை இரு அணிகளாலும் புலிகளுக்கு தெளிவாக்கப்பட்டது. இந்தியா-இலங்கை ஒப்பந்தம் (புலிகளுடன் அல்ல, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தம்) மூலம் இலங்கையை தனது வெளியுறவுக் கொள்கை செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதன் மூலம் இந்தியா தனது நோக்கத்தை நிறைவேற்றியது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்னவென்றால், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழர்களின் பாரம்பரிய நிலத்தை அங்கீகரித்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசாங்கங்களுக்கான மாகாணமாக இணைக்கப்பட்டது. இந்தியா தமிழ் ஈழத்தை வெள்ளித் தட்டில் வைத்து ஒப்படைக்கும் என்று பிரபாகரன் எதிர்பார்த்திருந்தால் அது தவறு. தொலைநோக்குப் பார்வை இல்லாமல் 100 சதவிகித ராணுவ வெற்றி மூலம் மட்டுமே தமிழ் ஈழத்தை அடைய முடியும் என்று தவறாக நம்பியிருந்தால், அது பிரபாகரனின் தவறு.

இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில், புலிகள் மறுத்தாலும், இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கு தெரியாமல், புலிகள் ரகசியமாக ஆயுதக் கப்பலை கொண்டு வந்தனர் என்பது உண்மை. ஒருபுறம், இந்திய அமைதிப் படையிடம் புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதாகக் கூறிக் கொண்டு, அதே நேரத்தில் ஆயுதங்களையும் கடத்தினர். இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் தடுத்து நிறுத்தி, குமரப்பா, புலேந்திரன் உள்பட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 17 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது. இதில், புலேந்திரன் உள்ளிட்ட பலர் கப்பலை வேடிக்கை பார்க்கவே சென்றிருந்தனர். பிரபாகரன் இந்த உறுப்பினர்கள் 17 பேருக்கும் சயனைடு குப்பிகளை வழங்கி அவர்களை 1987 ஆம் ஆண்டு, அக்டோபர் 5 ஆம் திகதி சயனைட் கடிக்க வைத்து, நிலைமையை மோசமாக்கினார். அவர்களில் 13 பேர் உயிரிழந்தனர். இந்த சயனைடு சம்பவத்தை தேவையில்லாத உயிரிழப்பாகவே நான் பார்க்கிறேன்.

பிரபாகரன் அனைத்து மீறல்களையும் நாடகங்களையும் உருவாக்கி இலங்கையில் ஏற்பட்டிருந்த சமாதானத்தை குழப்ப முயன்றார். தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் ஏதாவது ஒன்றை சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் திலீபன் தனது உயிரை தியாகம் செய்ய உண்மையிலேயே விரும்பியிருக்கலாம். இருப்பினும், பிரபாகரன் தனது சொந்த அரசியல் காரணங்களுக்காக திலீபனின் உண்ணாவிரதத்தைக் கையாண்டார்.

திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை துவக்கிய தினத்தன்று நான் பிரபாகரனு டன் இருந்தேன். பிரபாகரன் காசி ஆனந்தனையும் என்னையும் திலீபனை நல்லூரில் உண்ணாவிரதப் போராட்ட இடத்துக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். திலீபனின் மரணத்துக்குப் பிறகு, பிரபாகரன் காசி ஆனந்தனையும் என்னையும் அவரது உடலை திருநெல்வேலியில் உள்ள யாழ்ப்பாண மருத்துவபீடத்தில் ஒப்படைக்குமாறு பணித்தார். அங்கு திலீபனின் உடலை எடுத்துச் சென்றேன். அங்கு உடற்கூறியல் துறைத் தலைவர் ரஜினி திராணகம மற்ற மருத்துவர் களுடன் சேர்ந்து உடலைப் பெற்றுக் கொண்டார்.

திலீபன், தனது உண்ணாவிரதப் போராட்டத்தின்போது முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் முக்கியமானவையோ, சிக்கலானவையோ அல்ல. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இதற்கு தீர்வு இருந்தது. இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கும் இலங்கை ராணுவத்தை மீண்டும் படை முகாமுக்குள் அடைத்து வைப்பதற்கும் சிறிது காலம் அவகாசம் தேவைப்பட்டது. திலீபனின் உண்ணா விரதம் மற்றும், சயனைடு சம்பவம் ஆகிய இரண்டும் பிரபாகரனால் இந்திய ராணுவத்துக்கு எதிராக தமிழ் மக்களைத் தூண்டுவதற்காக திட்டமிடப்பட்ட செயல்களாகும். இந்த உத்தியானது, இறுதியில் வெற்றி பெற்றது.

இந்தியா எதிரி அல்ல் பிரபாகரன் வேண்டுமென்றே இந்தியாவை எதிரியாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தினார். இதன் விளைவாக, இலங்கை தமிழ் சமூகம் இப்போது அவர்கள் ஆரம்பத்தில் சந்தித்ததை விட மிகவும் குறிப்பிடத்தக்க இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்த விளைவுகள் இரண்டு முதல் மூன்று தலைமுறைகளுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துரதிருஷ்டவசமாக, 1980-க்குப் பின்னர், விடுதலைப் புலிகளின் மத்தியக் குழு அதன் செயல்திறனை இழந்து விடுதலைப் புலிகளின் தனித் தலைவர் என்ற நிலையை பிரபாகரன் உறுதிப்படுத்துவதற்கு வழிவகுத்தது.

ஒரு சிறிய அளவிலான புகழ் மற்றும் அதிகாரத்தைப் பெறும்போது தனி நபர்கள் சுய முக்கியத்துவத்தை உயர்த்துவது பொதுவானது. இது 'மேசியா காம்ப்ளக்ஸு'டன்' (messiah complex.) ஒப்பிடக்கூடிய ஒரு போக்காகும். இந்த காம்ப்ளக்ஸ் கொண்டவர்கள் தாங்கள் ஒரு பெரிய பணியை செய்ய வந்த மீட்பர் என்று தங்களை தாங்களே நம்புகின்றனர். இது யதார்த்தத்திலிருந்து துண்டிக்கப்படுவதற்கும், பகுத்தறிவு இல்லாமல் முடிவெடுப்பதற்கும் வழிவகுக்கிறது.

**தொடரும்....**



# ஷேக் ஹசீனா:

## வீழ்த்த முடியாத வங்கத்தின் இரும்பு பெண்மணி!


**நமது சிறப்பு செய்தியாளர்**

வங்கதேசத்தின் பிரதமராக தொடர்ந்து 4வது முறையாக ஷேக் ஹசீனா தேர்வாகியுள்ளார். நடந்து முடிந்த பொதுத்தேர்தல் பல சர்ச்சைகளுக்கு வித்திட்ட நிலையில், ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி 300 தொகுதிகளில் 223 இல் வெற்றி கண்டுள்ளது. இந்த தேர்தல் ஒரு ஏமாற்று

வேலை என பிரதான எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி குற்றம் சாட்டி தேர்தலைப் புறக்கணித்த நிலையில் இந்த வெற்றியை அவாமி லீக் கட்சி பெற்றுள்ளது. பொதுத்தேர்தலில் 40மூ வாக்குகள் மட்டுமே பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வங்கதேச தேர்தல் வரலாற்றில் பதிவான அதி குறைவான வாக்கு சதவீதம் இதுவாகும். இதற்கு முந்தைய, 2018 பொதுத்தேர்தலில் 80 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியிருந்தது. ஷேக் ஹசீனா எட்டாவது முறையாக கோபால்கஞ்ச்-3 தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். 1986இல் இருந்து இத்தொகுதியில் போட்டியிட்டு வரும் அவர், இந்த முறை 2,49,965 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட பங்களாதேஷ் சுப்ரீம் கட்சியைச் சேர்ந்த நிஜாம் உதின் லஷ்கர் வெறும் 469 வாக்குகள் மட்டுமே வென்றார். வெற்றி-தோல்விக்கான இந்த வாக்குவிகிதம் உலக சாதனைகளில் ஒன்றாகும். அதாவது ஷேக் ஹசீனா 99.63 சதவீத வாக்குகளைப் பெற்ற அதேவேளை, அவரை எதிர்த்துப் போட்டியிட்டவரால் வெறும் 0.37 சதவீத வாக்குகளையே பெறமுடிந்தது. 300 பேர் கொண்ட வங்கதேசத்தின் நாடாளுமன்றத்தில் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆளும் அவாமி லீக் கட்சி 222 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. அவாமி லீகின் கூட்டணிக் கட்சியான ஜாதியா கட்சி 11 இடங்களைப் பெற்றிருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி (பி.என்.பி.) தேர்தலில் பங்கு பெறவில்லை. அதன் தலைவியும் முன்னாள் பிரதமருமான கலிதா






ஜியா ஊழல் குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இடைக்காலத் தலைவராக இருக்கும் அவரது மகன் தாரிக் ரெஹ்மான், கைதிலிருந்து தப்புவதற்காக லண்டனில் தஞ்சமடைந்திருக்கிறார். பெரும்பாலான பி.என்.பி. கட்சியின் தலைவர்கள் வன்முறை, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகளே இல்லை என்று சொல்லிவிட முடியாதபடி, மிக சாதூ ர்யமாகத் தேர்தலை நடத்தி வெற்றியும் கண்டிருக்கிறார் பிரதமர் ஷேக் ஹசீனா. அவாமி லீக் கட்சியின் போட்டி வேட்பாளர்கள் பலர் சுயேச்சைகளாகக் களமிறங்கினார்கள். அவர்களில் அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள்தான் எதிர்க்கட்சியாகச் செயல்படுவார்கள்.

வங்கதேச பிரதமராக இருக்கும் ஷேக் ஹசீனா பதவி விலகி, இடைக்கால அரசின் கீழ் தேர்தல் நடைபெற வேண்டும் என எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி வற்புறுத்தி யிருந்தது. அதற்கு, பிரதமர் ஷேக் ஹசீனா சம்மதிக்கவில்லை. அதற்குப் பதிலாக இந்தியா உள்ளிட்ட பல நாடு களையும், சர்வதேச அமைப்புகளையும் பார்வையாளர்களாக்கி, தேர்தலில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய முற்பட்டார் ஷேக் ஹசீனா. வங்கதேச தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டை அவர்கள் பாராட்டியும் இருக்கிறார்கள். ஆனால், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட சில மேலைநாடுகள், தேர்தல் முறையாக நடைபெற்றதாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எல்லா கட்சிகளும் தேர்தலில் போட்டியிடவில்லை என்பதையும், பிரதான எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சியின் தலைவர்கள்

சிறையில் அடைக்கப்பட்டதையும் தேர்தல் முறைகேடுகள் என்று அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால், அவர்களும் ஷேக் ஹசீனாவுக்கு பெரியளவு அழுத்தம் கொடுக்கத் தயார் இல்லை.

ஷேக் ஹசீனாவின் அரசியல் பயணமும் வங்கதேசத்தின் ஜனநாயகப் பயணமும் வேலணை– குறிகாட்டுவான் சாலை போல கரடுமுரடானவை. 'வங்கபந்து' என்று அழைக்கப்படும் வங்கதேசம் உருவாகக் காரணமாக இருந்த ஷேக் முஜிபுர் ரெஹ்மானின் மகள்தான் ஷேக் ஹசீனா. 1975 ஆகஸ்ட் 15–ஆம் தேதி நடந்த ராணுவப் புரட்சியில் பிரதமர் ஷேக் முஜிபுர் ரெஹ்மானும் அவரது குடும்பத்தினரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஷேக் ஹசீனாவின் 10 வயது இளைய சகோதரர் உட்பட அவரது குடும்பத்தைச் சேர்ந்த 18 உறுப்பினர்களைக் கொலை செய்து கொலைத் தாண்டவம் ஆடியது ராணுவம். அந்தப் படுகொலை நடக்கும்போது வெளிநாட்டில் இருந்ததால், ஷேக் ஹசீனா உயிர் தப்பினார். அதில், அவரது கணவர், குழந்தைகள், சகோதரி தவிர முழு குடும்பமும் கொல்லப்பட்டது. பிறகு இந்தியாவில் தஞ்சமடைந்த அவர், அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் உதவியுடன், டெல்லியில் வேறு பெயரில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார்.

ஷேக் ஹசீனா 1996இல் வங்கதேசத்தின் பிரதமராக முதல்முறையாக தேர்வானார். அதன் பிறகு, 2008–இல் பல தோல்விக ளுக்குப் பிறகு மீண்டும் பிரதமரான ஷேக் ஹசீனா வங்கதேசத்தில் பல அதிரடி மாற்றங்களைக் கொண்டு வந்தார். இஸ்லாமிய நாடாக இருந்த வங்கதேசத்தை மதச்சார்பற்ற நாடாக்கியதில் தொடங்கி, பின்தங்கிய, வறுமையான நாட்டை வளர்ச்சிப் பாதையில் நடைபோட வைத்தது வரை அவரது கடந்த 15 ஆண்டுகால ஆட்சியில் செய்திருக்கும் சாதனைகள் ஏராளம். மத அடிப்படை வாதக் குழுக்க ளுக்கும் தீவிரவாதச் செயல்பாடு களுக்கும் எதிராக நடவடிக் கைகளை



முடுக்கிவிட்டதில், அவரது துணிச்சலை யும் தொலைநோக்கையும் அவரை எதிர்ப்பவர்கள் கூடப் பாராட்டுகிறார்கள்.

இந்த தேர்தல் வெற்றியின் மூலம் 5வது முறையாக வங்கதேசத்தின் பிரதமராக தேர்வாகி, அதிகமுறை தேர்தலில் வெற்றி பெற்றவர் என்கிற வரலாற்று சாதனையையும் அவர் படைத்துள்ளார். இந்த வெற்றியைத் தொடர்ந்து,செய்தியாளர்களிடம் பேசிய ஷேக் ஹசீனா, "தாயுள்ளத்தோடு என் நாட்டு மக்களுக்கு சேவை செய்து வருகிறேன். அதனால்தான், மக்கள் மீண்டும்மீண்டும் என்னையே  தேர்வு செய்கின்றனர்." என்றார்.


பொருளாதார ரீதியில் வங்கதேசத்தை சரியான பாதையில் அவர் வழிநடத்துகிறார் என்றே பொருளாதார நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் வங்கதேசத்தில் தனிநபர் வருமானம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.  கடந்த 20 ஆண்டுகளில் இரண்டரை கோடிக்கும் அதிகமான மக்கள் வறுமையின் பிடியில் இருந்து விடுபட்டிருப்பதாக உலக வங்கி கூறுகிறது. உலகின் ஆடை உற்பத்தி செய்யும் நாடுகளில் சீனாவுக்கு அடுத்தபடியாக 2வது இடத்திற்கு வங்கதேசம் முன்னேறியுள்ளது. கடந்த ஆண்டு 45 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்திருக்கிறது. இதில் பெரும்பாலானவை ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிற்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஆனால், ஐநா மற்றும் பிற சர்வதேச அமைப்புகள் மனித உரிமை மீறல்கள் மற்றும் கருத்து சுதந்திரத்தை நசுக்குவது தொடர்பாக வங்கதேசத்தை எச்சரித்து வருகின்றன.

பதவியேற்ற நாளில் இருந்து தனது குடும்பத்தை படுகொலை செய்த ராணுவ அதிகாரிகள், ராணுவ வீரர்களை தேடித் தேடி வேட்டையாடினார் ஷேக் ஹசீனா. அந்த வகையில் வங்கதேசத்தின் இரும்புப் பெண்மணி என்றே அவர் அழைக்கப்படுகிறார். 1996இல் முதலில் அவர் தேர்தலில் வென்று பிரதமர் ஆனார். 2001இல் பிரதமர் பதவியை இழந்த போதிலும், ஏழே ஆண்டுகளில் மீண்டும் அவர் தேர்தலில் வென்று 2008இல் பிரதமர் ஆனார். அதன் பிறகு அவரை வீழ்த்தவே முடியவில்லை. இனியும் அவரது ஆயுள் காலத்தில் அவரை இன்னொருவரால் விழுத்த முடியுமா தெரியவில்லை என்றே சர்வதேச நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். அதற்கு, ஷேக் ஹசீனா செய்த மக்கள் பணிகள் ஒரு காரணம் என்றால், எதிர்க்கட்சிகளை திட்டமிட்டு நசுக்கிய அவரின் இன்னொரு முகமும் காரணம் என்கிறார்கள் அவர்கள்.

# மாத்தையாவின் கதை:

## புலிகள் அமைப்பில் அரசியல், அதிகாரப் போட்டி இன்னும் பல

பாகம் 01



(இ-வ) மாத்தையா, அன்ரன் பாலசிங்கம், பிரபாகரன், இந்திய தூதர் ஜே.என்.தீக்ஷித், இந்திய ராணுவ மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங் பலாலி ராணுவ முகாமில்-1987.


எழுத்தாளர்:
**கணியன் பூங்குன்றன்**



நன்றி: ஜப்னா மொனிட்டர்


மொழிபெயர்ப்பு: **பா.ராஜா**

### மாத்தையா– பிரபாகரன் யுத்தக் களத்துக்கு அப்பால் ஒரு பந்தம்

ஒரு காலத்தில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் (எல்.டி.டி.இ) முக்கிய பிரமுகராகவும், அமைப்பின் துணைத் தலைவர் என்ற ரீதியிலும், மக்களால் நன்கு அறியப்பட்டவராகவும் விளங்கினார் மாத்தையா (கோபாலசுவாமி



முல்லைத்தீவு, நித்திகைக்குளத்தில் உள்ள முகாமில் பிரபாகரனும், மாத்தையாவும், காலம்- 1980களின் பிற்பகுதி.

மகேந்திரராஜா). இந்த நிலையில், அவர், தனது அமைப்பினராலேயே 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைது செய்யப் பட்டு, 16 மாதங்கள் கொடுஞ்சிறை வாசத்தை அனுபவித்தார். பிறகு, 1994 ஆம் ஆண்டு, டிசம்பர் 28 ஆம் திகதி அன்று மாத்தையா கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. அவர் கொல்லப்பட்டு, 29 ஆண்டுகள் ஆகிவிட்டன.

வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் இதர முக்கிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத். தலைவர்களைப் படுகொலை செய்வதற்காக தீட்டப்பட்ட சதித் திட்டத்தில் இந்தியாவின் “ரா” (Research and Analysis Wing -RAW) அமைப்புடன் கூட்டுச் சேர்ந்து இயங்கியதாக மாத்தையா மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்நிலையில்,

இந்திய “ரா” அமைப்பு மீது எல்.டி.டி.இ.யின் உளவுப் பிரிவுத் தலைவரான பொட்டு அம்மானுக்கு ஏற்பட்ட சித்த பிரேமைக்கு ஒப்பான தீவிர சந்தேக மனநிலை, எல்.டி.டி.இ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு தனது சொந்தப் பாதுகாப்பு தொடர்பாக இருந்த சந்தேக மனநிலை ஆகியன மாத்தையாவின் மரணத்துக்கு முக்கியக் காரணிகளாக அமைந்தன என்று ஜப்னா மொனிட்டருடன் பேசிய மூத்த புலி உறுப்பினர்கள் தெரிவித்தனர். மேலும், மாத்தையாவை வீழ்த்தி, எல்.டி.டி.இ. அமைப்புக்குள் முக்கியப் பதவியை அடைய வேண்டும் என்ற எண்ணம் பொட்டு அம்மானுக்கு இருந்தது என்றும், இதனால், மாத்தையாவுக்கு எதிராக பல்வேறு சம்பவங்களை அவர் திட்டமிட்டு அரங்கேற்றினார் என்றும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன. மாத்தையாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, எல்.டி.டி.இ.யின் முக்கியப் பதவியை எட்டிய பொட்டு அம்மான். எல்.டி.டி.இ.யின் அறிவிக்கப்படாத இரண்டாம் நிலை தலைவராகவும் உயர்ந்தார். அதாவது, மாத்தையா முன்னர் வகித்த பதவியை பொட்டு அம்மான் அடைந்தார் எனலாம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் முழு நம்பிக்கையைப் பெற்றவராகவும், துணைத் தலைவராகவும் விளங்கிய மாத்தையா, விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அப்பாற்பட்ட ஓர் உறவை பிரபாகரனுடன் கொண்டிருந்தார். இதை ஆத்மார்த்தமான உறவு என்றும் சொல்லலாம். இலங்கை அரசுக்கு எதிராக, ஆயுதங்களை ஏந்தி போராட்டங்கள் நடத்தியதில் முக்கியக் களமாக விளங்கியது வல்வெட்டித்துறை. பிரபாகரனும் மாத்தையாவும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். இருவரும், ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் (பாரம்பரியமாக, இச் சாதியினர் கடல் சார்ந்த மற்றும் மீனவ சமூகத்தைச் சார்ந்தவர்கள் என அறியப்பட்டனர்). மற்றும் இருவரும் சிதம்பரம் கல்லூ ரியின் முன்னாள் மாணவர்கள். இதனால், பிரபாகரன் மற்றும் மாத்தையா இடையேயான உறவு வலுப்பெற்றது. இருவரும் ஒத்த வயதினர். பிரபாகரன் பிறந்தது 1954 ஆம் ஆண்டு, மாத்தையா பிறந்தது 1956 ஆம் ஆண்டு. அவர்களின் குடும்பங்களுக்கு இடையேயும் உறவுமுறை இருந்தது என்ற கருத்தும் நிலவி வந்தது.

மாத்தையாவுக்கு, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடனான தொடர்பு 1978 ஆம் ஆண்டு ஏற்பட்டது. பிரபாகரனால் நேரடியாக விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் மாத்தையா உள்வாங்கிக் கொள்ளப்பட்டார். அமைப்பில், மாத்தையாவின் செயல்பாடுகள் பிரபாகரனை ஈர்த்தது எனவும் சொல்லலாம். புலிகள் அமைப்பில் முக்கியப் பொறுப்பை வகிக்க பிரபாகரனால் நேரடியாக மாத்தையா தேர்ந்தெடுக்கப்பட்டார். புலிகள் அமைப்பில், துவக்கத்தில் இவர், “சிறி” (Sri) என்று “அஜித்” என்றும் மற்றவர்களால் அறியப்பட்டார், அழைக்கப்பட்டார். காலப்போக்கில், அவர் அமைப்பில் முக்கிய இடத்தைப் பிடித்தார். 1981 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளுக்கிடையே இவருடன் இந்தியாவில் தொடர்பில் இருந்த புலி பிரமுகர் பிரமுகர் ஒருவர், மாத்தையா “சிறி” என்ற பெயரால் புலிகள் அமைப்பினரால் அழைக்கப்பட்டார் என நம்மிடம் தெரிவித்தார். அதற்கு பிறகு, 1985-ல் இவர், விடுதலைப் புலிகள் அமைப்பினரிடையேயும் “மாத்தையா” என்று பரவலாக அறியப்பட்டார். இவர் முட்டாள் எனப் பொருள்படுப்படியாக “மொக்கு” மாத்தையா என்றும் அழைக் கப்பட்டார் என்று எல்.டி.டி.இ. அமைப்பில் முக்கியப் பொறுப்பில் இருந்த நபர் ஜாஃப்னா மானிட்டரிடம் தெரிவித்தார். “மாத்தையா” என்ற சிங்கள சொல்லுக்கு, தமிழில் “ஐயா” எனப் பொருள்படும். இவருக்கு மாத்தையா என்ற பெயரானது, 1989 ஆம் ஆண்டு இவர் பிரேமதாசா அரசுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதற்கு பின்னரே ஏற்பட்டது



செல்லக்கிளியுடன் பிரபாகரன், உடையார்கட்டு பயிற்சி முகாமில், காலம்- 1983 தொடக்கம்.

என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால், மாத்தையாவுக்கு நெருக்கமானவர்கள், 1984 ஆம் ஆண்டிலேயே இவர் “மாத்தையா“ என்று அழைக்கப்பட்டதாக ஜப்னா மொனிட்டருக்கு தெரிவித்தனர்.


## பயிற்சி முகாம்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் பங்கு

விடுதலைப் புலிகளின் அதிகாரப்பூர்வ பயிற்சி முகாம்கள் எதிலும் மாத்தையா முறையான ராணுவப் பயிற்சி பெறவில்லை என்று தெரிகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உடையார்கட்டு என்ற இடத்தில் 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் விடுதலைப் புலிகளின் முதல் ராணுவப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த முன்னோடி பயிற்சி முகாமுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தலைமை வகித்ததுடன் பயிற்சியாளராகவும் இருந்தார். இந்த ஆரம்பப் பயிற்சியில் சுமார் 25 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சி முகாமில் கிட்டு, பொட்டு அம்மான், செல்லக்கிளி, பொன்னம்மான், புலேந்திரன் மற்றும் லாலா ரஞ்சன் உள்பட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பல முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இந்தச் சமயத்தில், எல்.டி.டி.இ. அமைப்பானது 30 உறுப்பினர்களுக்கு குறைவான உறுப்பினர்களைக் கொண்ட, ஒப்பீட்டளவில் சிறிய கொரில்லா குழுவாக இருந்தது. இந்த முதலாவது முகாமில் பங்கேற்ற வட்டாரங்கள், ஜாஃப்னா மானிட்டரிடம் தெரிவிக்கையில், முகாம் நடைபெற்ற இடத்தில் மாத்தையா சில முறை மட்டுமே காணப்பட்ட போதிலும், அவர் பயிற்சியில் பங்கேற்கவில்லை என்றனர்.

1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த இனக் கலவரத்தை தொடர்ந்து, அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியின் தலைமையிலான இந்திய அரசாங்கம், விடுதலைப் புலிகள் உள்பட இலங்கையைச் சேர்ந்த பல்வேறு தமிழ்




இடமிருந்து: புலி உறுப்பினர் அப்துல்லா, பிரபாகரன், தமிழக அரசியல்வாதிகள் அழகர்சாமி மற்றும் நெடுமாறன், தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் கமல், செழியன், இடம்- தமிழ் நாட்டில் உள்ள விடுதலைப் புலிகளின் பயிற்சித் தளம்.




இடமிருந்து: புலிகள் போராளிகளான லிங்கம், அருணா, புலிகளின் தலைவர் பிரபாகரன், புலேந்திரன், விக்டர், மற்றும் பொட்டு அம்மன். இடம்: தமிழ்நாடு ராஜபாளையத்தில் உள்ள கூமாபட்டி பயிற்சி முகாம்

போராளிக் குழுக்களுக்கு ரகசியமாக ராணுவப் பயிற்சிகளை வழங்கியது. வட இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலும், இமாசலப் பிரதேசம், காங்க்ரா மாவட்டத்தில் உள்ள ஜவாலாமுகி என்ற இடத்திலும் நடத்தப்பட்ட முதல் இரண்டு பயிற்சி முகாம்கள் இந்த ரகசிய நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். விடுதலைப் புலிகளுக்குள் பட்ச் -1, பட்ச் -2 என அழைக்கப்படும்







இந்திய பயிற்சி முகாம் படங்கள்

இந்த அமர்வுகளில், இந்திய ராணுவ அதிகாரிகளால் நேரடியாக பயிற்சியளிக்கப்பட்டது. இந்த ரகசிய ராணுவ உதவியானது, இந்திரா காந்தியின் தலைமையிலான அரசாங்கத்தின் பரந்துபட்ட முன்முயற்சியின் ஓர் அங்கமாக இருந்தது. அதேபோன்ற பயிற்சியை இலங்கை தமிழ் போராளிக் குழுக்களுக்கு வெவ்வேறு இடங்களில் வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

ராணுவப் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் முதல் தொகுதியினருக்கு, அவர்கள் தங்கியிருந்த இடம் குறித்த விவரம்கூட தெரியாத அளவுக்கு ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. ஒரு வெளிநாட்டு போராளிக் குழுவுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதனால் உள்நாடு, சர்வதேச ரீதியில் ஏற்படக் கூடிய எதிர்வினைகள் காரணமாக பயிற்சி குறித்த ரகசியத்தை இந்திய அரசாங்கமும் 'ரா'–வும் காக்க விரும்பியது.

போராளிகள் நெடுந் தொலைவுக்கு,



தமிழ்நாட்டில் சிறுமலை பயிற்சி முகாமில் பிரபாகரன்

மாற்றுப் பாதைகளில் கொண்டு செல்லப்பட்டு, ரகசியத் தன்மையை உறுதி செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டனர். முதலாவது முகாமில் பயிற்சி பெற்றவர்கள் உத்தரப் பிரதேசத்தில் இருப்பதை அறிந்திருந்தும், அவர்களின் பயிற்சித் தளம் அமைந்துள்ள சரியான இடம் குறித்து அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. அதேபோன்று பயிற்சிக்காக அனுப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் இரண்டாவது தொகுதியினர் ரகசியமான முறையில் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் தில்லியின் ஹஸ்ரத் நிஜாமுதீன் ரயில் நிலையத்திலிருந்து, இரண்டு நாள் பேருந்துப் பயணத்தைத் தொடங்கினர். ரகசியத்தைக் காக்க வேண்டும் என்பதற்காகவே மாற்றுப் பாதைகளில், நெடுங்தொலைவுக்கு பயணப்பட்டனர். புத்திசாலித்தனமாக, இந்த தொகுப்பைச் சேர்ந்த ரஹீம், சுசீலன் ஆகிய இரண்டு போராளிகளால், அவர்களின் இருப்பிடத்தைக் கண்டறிய முடிந்தது. இமாசலப் பிரதேசத்தின் காங்க்ரா மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமமான ‘ஜவாலாமுகி’ என்று அவர்கள் இருக்கும் இடத்தை, தபால் அலுவலகப் பலகையில் பெயரை

வைத்து அவர்கள் அடையாளம் கண்டனர். தனது தொழில்நுட்பத் திறமையால் அங்கீகரிக்கப்பட்ட சுசீலன், மாத்தையா விவகாரத்தில் பரிதாபமாகக் கொல்லப்பட்டார். இந்தப் பயிற்சி முகாம்களில் கலந்து கொண்டவர்கள் மாத்தையா இந்தப் பயிற்சி அமர்வுகளில் பங்கேற்கவில்லை என்பதை உறுதிப்படுத்தினர்.

## விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி மற்றும் பிரபாகரனின் மூட நம்பிக்கைகள்

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு முதல் இரண்டு பிரிவு பயிற்சி முகாம்கள் இந்திய அரசால் நடத்தப்பட்டது. இவற்றைத் தொடர்ந்து, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழகத்தில் ஏழு கூடுதல் பயிற்சி முகாம்களை ஏற்பாடு செய்தனர். இந்த அமர்வுகளுக்கு, விடுதலைப் புலிகளின் மொழியில் 'மாஸ்டர்கள்' என்று குறிப்பிடப்படும் பயிற்சியாளர்கள் தலைமை வகித்தனர். இந்திய ராணுவ அதிகாரிகளால் நடத்தப்பட்ட முதல் இரண்டு பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்றவர்களே மாஸ்டர்கள் ஆகினார்கள். விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட முதல் முகாம் ஒட்டுமொத்தமாக,



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகஸ்ட் 4, 1987 அன்று இலங்கை யாழ்ப்பாணம் சுதுமலை அம்மன் கோயிலில் உரையாற்றும்போது... அவருடன் இடமிருந்து: துணைத் தலைவர் மாத்தையா, முன்னாள் கிழக்கு மாகாண தளபதி கருணா, முன்னாள் யாழ் தளபதி கிட்டு

மூன்றாவது முகாம்) 6 மற்றும் 10-வது முகாம்கள், சேலம் மாவட்டம், கொளத்தூர் பகுதியில் உள்ள சிறிய மலை குக்கிராமமான கும்பாரப்பட்டியில் நடந்தது குறிப்பிடத்தக்கது. காலப்போக்கில், கும்பாரப்பட்டி என்ற இந்த கிராமம், 'புலியூர்' என்று அறியப்பட்டது. திண்டுக்கல் சிறுமலையில் உள்ள பழ.நெடுமாறனின் நெருங்கிய உதவியாளர் திண்டுக்கல் அழகிரிசாமிக்குச் சொந்தமான தோட்டத்தில் விடுதலைப் புலிகளின் 4-வது மற்றும் 7-வது பயிற்சி முகாம்கள் நடந்தன. 5 மற்றும் 9-வது பயிற்சி முகாம்கள் ராஜபாளையம் கூமாப்பட்டியில் நடத்தப்பட்டது. 7-வது தொகுதி பெண்களுக்கானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பயிற்சித் தொகுதிகளின் ஒரு சுவாரசியமான அம்சம் என்னவென்றால், அவை 1 முதல் 10 வரை எண்ணிக்கையில் இருந்தன. ஆனால், மொத்தம் ஒன்பது முகாம்கள் மட்டுமே இருந்தன. 8-வது முகாம் நடத்தப்படவில்லை. 8 ஆம் எண்ணை பிரபாகரன் துரதிருஷ்டவசமாகக் கருதினார். இதனால், 8 வது முகாம் நடத்தப்படவில்லை. இந்த மூட நம்பிக்கை 1990-கள் வரை விடுதலைப் புலிகளின் தலைவரிடத்தில் இருந்ததாக ஜாஃப்னா மொனிட்டரிடம் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. மாத்தையா இந்த முகாம்கள் எதிலும் பங்கேற்கவில்லை என்று இந்தப் பயிற்சி முகாம்களில் பங்கேற்றோர் நம்மிடம் தெரிவித்தனர்.

இந்த முறையான ராணுவப் பயிற்சியைப் பெறாதது மாத்தையா மட்டுமல்ல. தமிழ் ஈழ கல்வித் திணைக் களத்தின் தலைவர் பேபி சுப்பிரமணியம் போன்ற விடுதலைப் புலிகளின் ஏனைய முக்கியப் பிரமுகர்களும் இதில் அடங்குவர். விடுதலைப் புலிகளின் விமானப் பிரிவு மற்றும் கடற்படைப் பிரிவின் நிறுவனர் கேணல் சங்கர் ராணுவ அலுவலகத்தின் (எம்.ஓ.) முன்னாள் தலைவர் அன்ரன் மாஸ்டர் மற்றும் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் நடேசன் ஆகியோரும் முறையான பயிற்சி முகாம்களில் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நபர்களைப் போலவே, மாத்தையாவும் வழக்கமான ராணுவப் பயிற்சியைப் பெறாமலேயே விடுதலைப் புலிகளுக்குள் ராணுவ நிலைகளில் அமர்த்தப்பட்டார். இருப்பினும், மாத்தையா உள்ளிட்ட இத்தகைய நபர்கள் எங்கேயோ, ஏதோ ஒரு வகையில் ராணுவப் பயிற்சி பெற்றுள்ளனர் என்பது புரிகிறது.

## மக்களின் நாயகன்

மாத்தையாவுடன் நெருக்கமாகப் பழகிய மக்களும், முன்னாள் விடுதலைப் புலி போராளிகளும் மாத்தையா மக்களின் நாயகன் என்பதை வலியுறுத்தி, ஜாஃப்னா மானிட்டருடன்



இடமிருந்து: சங்கர், மாத்தையா, பிரபாகரன், யோகி, இந்து நாளிதழின் ஆசிரியர் என்.ராம். இடம்- சென்னை



புலிகளின் சங்கர், மாத்தையா, பிரபாகரன் மற்றும் யோகி, கடாபி (நின்று கொண்டிருப்பவர்)
IPKF அதிகாரிகளுடன்.

தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பிரபாகரனின் பால்ய நண்பராக அறியப்பட்ட கேப்டன் பண்டிதர் (எஸ்.ரவீந்திரன்). 1985 ஜனவரியில் இவர் இறக்கும் வரை, யாழ்ப்பாணத்தின் தளபதியாகப் பணியாற்றியவர். இவரைப் போலவே, மாத்தையாவும் மக்களை எளிதாகக் கவரும் திறனைக் கொண்டிருந்தார். தனி நபர்களுடன் தொடர்பு கொண்டு



IPKF ஹெலிகாப்டரில் அன்ரன் பாலசிங்கம், IPKF அதிகாரி மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங் ஆகியோருடன் பிரபாகரன்

அவர்களை புலிகளுக்கு ஆதரவாகத் தூண்டும் திறன் மாத்தையாவிடம் இருந்தது. உண்மையில், ஒரு குறிப்பிட்ட தருணத்தில், அமைப்புக்குள் முறையாக நியமிக்கப்பட்ட மக்கள் தொடர்பு (பி. ஆர்.) பிரிவு எதுவும் இல்லாவிட்டாலும், புலிகளின் மக்கள் தொடர்பு முயற்சிகளை மாத்தையா திறம்பட மேற்கொண்டார். புலிகளின் தொடர்புகள் மற்றும் பொதுமக்களுடனான பிம்பத்தை வடிவமைப்பதில் அவர் முக்கியப் பங்காற்றினார்.

1984 ஆம் ஆண்டு, பிரபாகரனால் விடுதலைப் புலிகளின் வன்னிப் பிராந்திய தளபதியாக மாத்தையா நியமிக்கப்பட்டார். கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசம், விடுதலைப் புலிகளுக்கு முக்கியமான பிரதேசமாக இருந்தது. வன்னி தளபதியாக மாத்தையா திறம்படச் செயல்பட்டதாக விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. குறிப்பிடத்தக்க வகையில், 1987-ல், இந்திய அமைதிப் படையுடனான மோதலுக்கு மத்தியில், எல்.டி.டி.இ. தலைமை தனது தளத்தை வன்னிப் பகுதிக்கு மாற்ற வேண்டியிருந்தபோது, மாத்தையா ஏற்படுத்தியிருந்த வலையமைப்புகள், மற்றும் அப்பகுதியில் இருந்த தொடர்புகள் புலிகளின் தலைமைக்கு விலைமதிப்பற்றதாக இருந்தன. வன்னிப் பிரதேசத்துடனான அவரது தொடர்புகளும் பரிச்சயமும் பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இந்த இக்கட்டான கால கட்டத்தில், அவர்களின் புதிய தளத்தை நிறுவுவதற்கும், அவர்களது

நடவடிக்கைகளைத் தொடர்வதற்கும் பெரிதும் உதவியாக இருந்தது.


இடமிருந்து இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் 1வது செயலாளர் ஹர்தீப் சிங் பூரி, பாதுகாப்பு இணை அதிகாரி கப்டன் குப்தா, மற்றும் பிரபாகரன்

## திரைக்குப் பின்னால் : விடுதலைப் புலிகளின் துணைத் தலைவராக மாத்தையா நியமனம்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் வரலாற்றில் மாத்தையாவின் பங்கு உண்மையில் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், அவரே, விடுதலைப் புலிகள் அமைப்பில், துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட முதல் மற்றும் கடைசி நபர் ஆவார். மாத்தையா கைது செய்யப்பட்டு, கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, துணைத் தலைவர் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை. அதிகாரப்பூர்வ ஆவணங்கள் இல்லாத போதிலும், 1987 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் மாத்தையா துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் ஜாஃப்னா மானிட்டரிடம் உறுதிப்படுத்தியுள்ளன.

1987 ஆம் ஆண்டு, ஜ"லை 29ஆம் திகதி, இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு முன்பு, இந்திய அரசாங்கம் புது டெல்லியில் கலந்துரையாடுவதற்காக பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்திருந்தது. ஆரம்பத்தில் தயக்கம் காட்டிய பிரபாகரன், இறுதியில் வருவதற்கு ஒப்புக் கொண்டார். 1987 ஆம் ஆண்டு, ஜ"லை 24 ஆம் திகதி அன்று, அவர் சுதுமலை அம்மன் கோவில் மைதானத்தில் இருந்து இந்திய ராணுவ ஹெலிகாப்டரில் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சென்னையில் இருந்து ராணுவ விமானத்தில் தில்லிக்கு பயணத்தைத் தொடர்ந்தார். சுதுமலையில் இருந்து அவருடன் விடுதலைப் புலிகளின் முக்கியப் பிரமுகர்களான 'யோகி' யோகரத்தினம் மற்றும் திலீபன் ஆகியோரும், அப்போது இந்தியத் தூ தரகத்தில் முதன்மைச் செயலாளராக இருந்தவரும், தற்போது நரேந்திர மோடி அரசாங்கத்தில் அமைச்சராக

இருப்பவருமான ஹர்தீப் சிங் பூரியும் இருந்தனர். சென்னையில் இருந்து பிரபாகரனுடன் விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கமும் டெல்லி பயணத்தில் கலந்து கொண்டார். டெல்லிக்குப் புறப்படுவதற்கு முன்னர், பிரபாகரன் தான் இல்லாத பட்சத்தில், துணைத் தலைவர் பொறுப்பை மாத்தையா ஏற்பார் என்று விடுதலைப் புலிகளுக்குள் அறிவித்தார். இந்த நியமனம் பொது அறிக்கைகள் அல்லது ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் மூலம் முறைப்படுத்தப்படவில்லை என்றாலும், பிரபாகரன், அவர் இல்லாத சமயத்தில் மாத்தையாவின் உத்தரவுகளைக் கடைப்பிடிக்குமாறு தனது பணியாளர்களுக்கு வெளிப்படையாக அறிவுறுத்தியதாக ஆதாரங்கள் உறுதிப்படுத்தின.

## எல்.டி.டி.இ. தலைமைத்துவத்துக்கான மாத்தையாவின் பாதையில் மாறுபட்ட கண்ணோட்டங்கள்

ஜாஃப்னா மானிட்டருடன் பேசிய முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குள், மாத்தையா விடுதலைப் புலிகளுக்குள் முதலில் எழுச்சி பெற்றதற்கான காரணங்கள் குறித்து கருத்து வேறுபாடு நிலவுகிறது. பிரபாகரனுடனான அவரது நெருங்கிய உறவே முதன்மையாக மாத்தையாவின் உயர்வுக்குக் காரணம் என்பது ஒரு சாராரின் கருத்து. பிரபாகரன் மாத்தையாவை நீண்ட காலமாக அறிந்தவர் என்றும், இருவரும் ஒரே இடமான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் இந்த முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர். இந்த பூகோள ரீதியிலான மற்றும் தனிப்பட்ட தொடர்பு மாத்தையா தீங்கற்ற மற்றும் நம்பத் தகுந்தவராக பிரபாகரன் பார்க்க வழிவகுத்தது என்று ஒரு சாரார் கருத்து தெரிவித்தனர். மேலும், மாத்தையா மீது பிரபாகரன் கொண்டிருந்த அபிமானமும், நம்பிக்கையும் மாத்தையாவின் எழுச்சிக்கு கணிசமான அளவு உதவியதாக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், ‘மொக்கு மாத்தையா’ என பேச்சு வழக்கில் அழைக்கப்படும் மாத்தையா, தனது தலைமைப் பதவிக்கு போட்டியாளர் அல்ல என பிரபாகரன் நம்பியதாக ஜாஃப்னா மானிட்டருக்கு முன்னாள் புலி உறுப்பினர்கள் தெரிவித்தனர். இது, மாத்தையாவின் உயர்வுக்கு மேலும் பங்களித்தது என்று அந்த வட்டாரங்கள் நம்புகின்றன. எவ்வாறாயினும், இந்தக் கருத்தை முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் சிலர் எதிர்க்கிறார்கள். குறிப்பாக, கிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்குப் புறப்பட்டதைத் தொடர்ந்து, மாத்தையாவின் எழுச்சியானது, சூழ்நிலைக்கு

ஏற்ப ஏற்பட்டது என்று அவர்கள் நம்புகிறார்கள். பிரபாகரனைத் தொடர்ந்து, பேபி சுப்பிரமணியம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மிக மூத்த உறுப்பினராக இருந்ததாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எனினும், பேபி சுப்பிரமணியத்தின் ராணுவம் சாராத பின்புலம் காரணமாக, அவரைப் பின்பற்றி மூப்பு மற்றும் அனுபவ அடிப்படையில் மாத்தையா, விடுதலைப் புலிகளின் ராணுவ மற்றும் செயற்பாட்டுக் கட்டமைப்புக்குள் முக்கியப் பதவிக்கான இயல்பான தெரிவானார் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இந்திய அமைதிப் படை (IPKF) வருகை

1987 ஆம் ஆண்டு, ஜுலை 29 ஆம் திகதி, இந்திய–இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, இந்திய அமைதிப் படை (Indian Peace Keeping Force) இலங்கையில் தங்கள் பணியின் ஒரு பகுதியாக, 1987 ஆம் ஆண்டு, ஜுலை 30 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்தது. ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படையின் வருகை உள்ளூர் மக்களிடம் அன்பான வரவேற்பைப் பெற்றது. எதிர்காலத்தில் ஏற்படும் பாதிப்புகளை அறியாத யாழ்ப்பாண மக்கள், இந்திய அமைதிப் படையினருக்கு மாலைகள் அணிவித்து, மலர்கள் தூவி வாழ்த்துத் தெரிவித்தனர்.

## விடுதலைப் புலிகளில் கிட்டுவின் தாக்குதலும் மாத்தையாவின் எழுச்சியும்


1987 ஆம் ஆண்டு, மார்ச் 29 ஆம் திகதி இரவு, அதாவது, இந்திய அமைதிப் படை இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைப்பதற்கு சுமார் நான்கரை மாதங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணம் இரண்டாவது குறுக்குத் தெருவில் கிட்டுவை ஏற்றிச் சென்ற மிட்சுபிஷி லான்சர் மீது அடையாளம்



கிட்டு தனது மனைவி சிந்தியாவுடன் சென்னையில்



ஐபிகேஎ.்.ப் அதிகாரிகளுடன் மாத்தையா, சங்கர், ரஹீம்



முல்லைத்தீவு நித்திகைக்குளத்தில் கேணல் சங்கருடன் பிரபாகரன்



பிரேமதாசாவுடன் புலிகளின் பேச்சுவார்த்தை அணி

தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதல் நடந்தபோது, கிட்டு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயிலும் தனது காதலி சிந்தியாவைச் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார். தாக்குதல் நடத்தியவர்கள் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், சக்தி வாய்ந்த கையெறி குண்டையும் வீசினர் இதனால் கிட்டுவுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவரது வலது கால், ஏறக்குறைய துண்டிக்கப்பட்டது.இந்த சம்பவத்தால், விடுதலைப் புலிகளுட னான கிட்டுவின் நீண்ட, புகழ்பெற்ற ராணுவ வாழ்க்கை முடிவுக்கு வந்தது. கிட்டுவின் வாழ்க்கைப் பாதையை மாற்றிய இச் சம்பவத்தைத் தொடர்ந்து, கிட்டு சென்னைக்கு இடம்பெயர்ந்தார். அங்கு, அவர் விடுதலைப் புலிகளின் பிரசார அலுவலகப் பணியைப் பொறுப்பேற்றார். இந்தத் தாக்குதலுக்குக் காரணமானவர் குறித்து இன்றுவரை எந்தத் தகவலும் இல்லை. ஒரு காலத்தில் பொட்டு அம்மானின் தலைமையின் கீழ் இருந்த விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு கூட, இச் சம்பவத்துக்கு பின்னணியில் யார் இருந்தனர் என்பதை கண்டுபிடிக்கத் தவறி விட்டது. எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் விடுதலைப் புலிகள் தரப்புக்குள் கணிசமான அதிர்வலைகளை ஏற்படுத் தியது. அமைப்புக்குள் மாத்தையா உயர் பதவிக்குச் செல்ல வழிவகுத்தது. கிட்டுவின் சென்னை நகர்வு மற்றும் அவர் தீவிர ராணுவ நடவடிக்கைகளிலி ருந்து விலகியதன் மூலம், விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் மாத்தையாவின் முக்கியத்துவம் கணிசமாக அதிகரித்தது. வன்னிப் பகுதியில் இருந்து யாழ்ப்பா ணம் திரும்பிய அவர், இந்தியப் படைக ளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை களை கவனிக்கும் முக்கியப் பொறுப்பை ஏற்றார்.

அதிகரிக்கும் மாத்தையாவின் புகழ்

**அடுத்த இதழில்...**

# பாடசாலையை விட்டு வெளியே வாருங்கள்



எழுத்தாளர்: **ஜேகே**

ஜேகே ஒரு ஜொனியன் என்பதில் பெருமையடை கிறேன் என்று ஜுட் அண்ணா தன் உரையில் சொன்னார். அந்த உரிமையில் இதை எழுதுகி றேன். இது பிரபல பாடசாலைகள் எல்லாவற்று க்கும் பொருந்தும் என்றாலும் முதலில் நம் பாடசாலையைத்தான் சுட்டவேண்டும் அல்லவா?

பரி. யோவான் கல்லூரி உருப்பட வேண்டும் என்று ஜொனியன்ஸ் எவரும் உண்மையிலேயே நினைக்கிறீர்கள் என்றால் முதலில் பாடசாலையை விட்டுக் கொஞ்சக்காலம் தள்ளி நில்லுங்கள்.

Get the hell out of there and leave the school alone.

பாடசாலை என்பது மாணவர்கள் கல்வி பயிலுவதற்கான இடம். அங்கே தற்போதைய மாணவர்கள் நிம்மதியாகப் படிப்பதற்குரிய சூழலுக்கு இடம்கொடுங்கள். ஆசிரியர்களின் வேலை அம்மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதே. அதற்கும் அனுமதியுங்கள்.

பாடசாலை என்றால் பாடங்களைப் போதிக்கும் சாலை. அங்கே படிப்புத்தான் முக்கியமானது. ஏனைய நடவடிக்கைகள்

எல்லாம் இரண்டாம் பட்சம்தான். “Curricular Activities” தான் ஒரு பாடசாலையில் தலையாய விசயம். அதை விடுத்து “Extra Curricular Activities” தான் மாணவப் பருவத்தி லேயே சிறந்தது என்ற எண்ணத்தை உருவாக்காதீர்கள்.

நீங்கள் அறுபது வயதில் ஒரு நிறுவ னத்தை நடத்தலாம். அற்புதமாக பாஸ்டா செய்யலாம். எட்டு விதமான நீச்சல் தெரிந்தவராக இருக்கலாம். வெள்ளை மாளிகையின் சுவர்ப் புகைப்படங்களுக்கு வானிஷ் போடும் வேலையில் இருக்கலாம். ஆண்டவரின் ஆசியை நேரடியாக அனுபவித்திருக்கலாம். ஆனால் இதையெல்லாம் பதின்மத்தி லிருக்கும் மாணவர்களின் தலையில் ஏற்றவேண்டும் என்று நினைக்கவேண்டாம். உங்களுக்கு ஒரு வெளிச்சம் கிடைக்கிறது என்பதற்காக மாணவர்கள் தலையில் எல்லாவற்றையும் திணிக்காதீர்கள்.


ஊருக்குப் போனால், ஊரிலிருந்தால், பாடசாலைக்கு சனி, ஞாயிறுகளில் செல்லுங்கள். அல்லது பாடசாலை முடிந்தபின்னர் செல்லுங்கள். பாடசாலை நேரத்தில் சென்று அதிபர், ஆசிரியர், வகுப்புகளைக் குழப்பாதீர்கள். கவனக் கலைப்பான்களாக செல்பி எடுத்து தொந்தரவு செய்யாதீர்கள்.

பாடசாலையில் நீங்கள் படித்தது ஒரு பத்து வருடங்களாக இருக்கும். இப்போது உங்களுக்கு அறுபது வயது என்றால் நாற்பது வருடங்கள் நீங்கள் வெளியுலகில் வாழ்ந்திருக்கிறீர்கள். உங்களை உருவாக்கியது பாடசாலை மாத்திரமல்ல என்பதை மறந்து விடாதீர்கள். எல்லாவற்றுக்கும் பாடசாலையை இழுக்காதீர்கள். அப்படியே பாடசாலைதான் நம்மை வளர்த்துவிட்டது என்று நினைத்தால், வீழ்ந்து கிடப்பவர்கள் என்று நீங்கள் நினைப்பவர்களையும் பாடசாலைதான் வீழ்த்தியது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். அடுத்த தடவை யாராவது ஜொனியன் சிறுவர் துஷ்பிரயோகம் செய்தாலோ, போதைப் பொருள் கடத்துபவராகவோ அறியப் பட்டாலோ, நீங்கள் உங்கள் பாடசாலைப் பக்கங்களில் “நான் ஒரு ஜொனியன் என்பதற்காக வெட்கப் படுகிறேன்” என்று அச்செய்தியைப் பகிரவேண்டும். மாட்டீர்கள் என்றால் இந்தப் பாடசாலைப் பெருமைகளைக் கொஞ்சம் அடக்கி வாசியுங்கள். இது பெருமைப் படுபவர்கள் எல்லோருக்கும் பொருந்தும். தமிழனாக, யாழ்ப்பாணியாக, பனங்கொட்டையாக, அத்தனை பெருமைகளுக்கும் பொருந்தும்.

நீங்கள் தொலைத்த இளமையை மீளக்கொண்டுவருவதற்காக நடப்புப் பாடசாலையை அடகு

வைக்காதீர்கள். பழைய மாணவர்கள் கூடிக் கொட்டமடிப்பது என்பது வேறு. அது அவரவர் ஊர்களில் அவரவர் காசைப்போட்டுச் செய்வது. அவரவர் விருப்பம். ஆனால் பழைய மாணவர் சங்கம் என்பதற்காக பாடசாலைக்கு ஏதும் செய்யவேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. நம் பாடசாலையைவிட நலிவுற்ற நிலையில் பல பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றுக்கு செய்யலாம். அல்லது உதவி எதுவும் செய்யாவிட்டால்கூட ஓகேதான். எல்லா சங்கங்களும் எந்நேரமும் உதவி செய்துகொண்டேயிருக்கவேண்டும் என்று விதியா என்ன? உபத்திரவம் செய்யாதவரைக்கும் ஓகே.

சமூகத்தில் அந்தஸ்து, அடையாளம், பெருமை என்பதெல்லாம் வெறும் மாயை என்பதை நீங்கள் உணரவேண்டும். அப்படியே அதை நீங்கள் அடைந்தாலும் அதற்குப் பாடசாலை மாத்திரம் காரணம் அல்ல. வீடு, பக்கத்து வீடு, புத்தகங்கள், தனியார் கல்வி ஆசிரியர்கள், நண்பர்கள், சூழ்நிலை, பணியிடம், உங்கள் திறன் எனப் பல காரணங்கள் அவற்றுக்கு உண்டு. Don't give undue credits to school alone.



பரி. யோவான் கல்லூரியின் ஒரு நிகழ்வுக்கு பிரதம விருந்தினர் ஆகவேண்டும் என்ற ஆசையில் பாடசாலையோடே படுத்துக்கிடக்க வேண்டாம். உங்களுக்கு ஒரு அடையாளம் வேண்டுமென்பதற்காக பாடசாலையைப் பயன்படுத்தவேண்டாம். Try to find your own personal legend. முடியவில்லையா? Just be yourself. You don't have to be somebody all the time.



லங்கா சிறியில் போய் எத்தனை செத்தவீட்டு செய்திகள் ஒரு நாளில் வருகின்றன என்று பாருங்கள். எல்லோருமே சாதாரண ஆனால் அவரவர் குடும்பங்களில் சாதனை செய்த மனிதர்கள். இந்தப் பிரபஞ்சத்தில் எங்களின் இடம் என்பது கடற்கரை மணற்றுகளைவிட பல்லாயிரம் மடங்கு சிறியது. அதற்குள் எதற்காக இந்த அடையாளச் சில்லெடுப்பு?

நான் கடைசியாகப் பாடசாலைக்குப் போய் பல வருடங்கள் ஆகிவிட்டன. போனது பாடசாலை முடிந்த ஒரு மாலை நேரத்தில். என் ஆசைக்கு நான் படித்த வகுப்பறைகளைச் சென்று பார்த்தேன். எனக்குத் தெரிந்த ஆசிரிய நண்பர் ஒருவர் வந்து நூலகத்தைத் திறந்துவிட்டார். பத்து நிமிடம் அதற்குள் அமர்ந்திருந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டினேன். பழைய ஹண்டி நூலகக் கட்டடம் ஞாபகம் வந்தது. அது இப்போது இல்லை. வில்லியம் மண்டபம் இல்லை. அதிபர் பங்களா இல்லை. உப அதிபர் வீடும் உடைக்கப்பட்டது. எல்லாமே தொன்மையான கட்டடங்கள். Heritage buildings. ஜொனியன் ஜொனியன் என்று சொல்லிச் சொல்லி, தொன்மையான கட்டடங்கள் எல்லாவற்றையும் இடித்துவிட்டீர்கள். Restoration என்ற வஸ்துபற்றிக் கேள்வியேபடவில்லையா? இப்படியே போனால் இருநூறு வருசப் பாடசாலையையும் இடித்துவிடுவீர்கள் போலத்தான் தெரிகிறது.

நான் படித்த காலத்தில் இப்படிப் பழைய மாணவர்கள் பாடசாலையை இலையான் மொய்ப்பதுபோல மொய்த்ததில்லை. படிப்புத்தான் அப்போது பிரதானமாக இருந்தது. அதைத்தவிர்த்து சில extra curricular activities. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான வினைத்திறன் பயிற்சியை ஒவ்வொரு வல்லுநர் வந்து சொல்லித்தந்ததாக ஞாபகம் இல்லை. எனக்குப் படிக்க நிறைய நேரம் இருந்தது. நூலகத்தில் வாசிக்க நேரம் கிடைத்தது. விளையாட நேரம் கிடைத்தது. சின்னச் சின்ன சந்தோசங்கள் நிறையவே இருந்தது. எல்லாவற்றையும்விட இன்றைக்கும் ஈகோ, எதிர்பார்ப்பு இல்லாத பல உயிர் நண்பர்களைப் பாடசாலை கொடுத்திருக்கிறது. நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் அல்லவா?

பாடசாலை மாணவர்களுக்கானது. அவர்களுடைய பதின்மங்களின் நினைவுகளுக்கானது.

Let's get the hell out of there and leave the school alone.

**நன்றி– முகநூல்**



# பிரசாரத்துக்கு அப்பால்...



பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு நாள். முகநூல் பதிவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பையும், அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் லேசாக விமர்சிக்கும் துணிச்சலான நடவடிக்கையை எடுத்தேன். இதுதொடர்பாக, எனது விமர்சனம் வருமாறு : “தலைவர் எங்களுக்காகச் சிந்திக்கிறார் என நாங்கள் மோட்டு வளையத்தைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டோம். தலைவர்

எங்களைக் கொண்டு போய் முள்ளி வாய்க்கால் முட்டுச் சந்துக்குள் நிறுத்தி விட்டார்".

இக் கருத்துக்கு, எனது அப்போதைய நெருங்கிய நண்பர்களிடமிருந்து வந்த எதிர்ப்பானது கடுஞ்சொற்களாகவும் இருந்தது எனது பிறப்பு, சமூகத்தில் எனக்குள்ள அந்தஸ்து மற்றும் எனது நுண்ணறிவு அளவீட்டின் (ஐ.க்யூ.) நிலை ஆகியவை குறித்து எனது நண்பர்கள் கேள்வி எழுப்பினர் எனது வகுப்புத் தோழர் ஒருவர், அந்த முகநூல் பதிவில் அனுதாபத் தொனியில் கருத்துத் தெரிவித்திருந்தார், "புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் விமர்சனம் செய்யத் துணிந்துள்ள நீங்கள் நிச்சயமாக மனநலம் குழம்பிய நிலையில்தான் இருக்க வேண்டும். நீங்கள் ஒரு மனநல மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்வது புத்திசாலித்தனமாக இருக்கும்" எனத் தெரிவித்திருந்தார். மேலும், என்னை கடுமையாக விமர்சித்த பலர், என்னுடன் மோதுவதற்கும் தயாராக இருந்தனர். முடிந்தால் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வா உனக்கு கடுமையான பாடம் புகட்டுகிறோம் என்று சவால் விடுத்தனர்.

## தமிழ் இளைஞர்களுக்குப் போதனை - வட கொரியாவுடன் ஒப்பீடு

இந்த முகநூல் இடுகைக்காக நான் பெற்ற பதிலானது, மூளைச்சலவை செய்யப்பட்ட மத அல்லது மதகுரு வழிபாட்டைப் பின்பற்றுபவர்களிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் எதிர்வினைக்கு இணையாக இருந்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அல்லது அதன் தலைவரை சாதாரணமாக விமர்சிப்பதே எனது நெருங்கிய நண்பர்கள் பலருக்கு விரும்பத்தகாத செயலாகவும், அவதூறாகவும் இருந்தது. நீங்கள் 1980 மற்றும் 1990-களில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிறந்து வளர்ந்திருந்தால், எந்தவொரு நபரும் அல்லது அமைப்பும் விமர்சனத்துக்கு உரியது என்ற உலகளாவிய கருத்தை நீங்கள்



கேள்விப்பட்டிருக்கவே மாட்டீர்கள். அந்த காலத்து இளைஞர்களுக்கு பிரபாகரனின் வார்த்தையே சட்டம் என இருந்தது. மாற்று சிந்தனை என்றொரு விஷயமே இருந்திருக்கவில்லை. மாற்று சிந்தனை கொண்டிருந்த ஒரு சிலரும் தேடித் தேடி வேட்டையாடப்பட்டனர். இறுதியில் பிரபாகரனின் சிந்தனையை விரும்பிய, விரும்பாமலோ ஏற்றுக் கொண்ட சமூகம் ஒன்றே இருந்தது. பிரபாகரனுக்கு எதிராகக் கதைக்க வேண்டாம், சிந்திக்க கூட யாரும் தயாராக இருந்திருக்கவில்லை.

தமிழ் இளைஞர்கள் 1980 மற்றும் 1990-களில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் பெற்ற மூளைச் சலவையின் அளவு,



வட கொரிய அரசு, தனது சொந்த மக்களின் மீது செலுத்திய மூளைச் சலவையின் அளவுக்கு ஒப்பானது. பல ஆண்டுகளுக்கு முன்னர், வட கொரிய மக்கள் தங்களின் முதன்மை தலைவரான கிம் ஜாங் உன்–னைப் பார்த்ததுமே கண்ணீர் சிந்தினர். இதுதொடர்பான வீடியோவை பார்த்தது எனக்கு நினைவிருக்கிறது. அந்த வீடியோவில், ஒரு வயதான பெண்மணி, மிகுந்த உணர்ச்சியுடன், தனது அன்புக்குரிய தலைவர் வலிமை மிக்க அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளிடமிருந்து, தங்கள் நாட்டை எவ்வாறு பாதுகாக்கிறார் என்பதை தொலைக்காட்சிக் குழுவினரிடம் விவரிக்கிறார். இலங்கையில் புலிகளின் ஆதிக்கம் இருந்த இடங்களிலும் கிட்டத்தட்ட இதே நிலைமைதான் இருந்தது.

வட கொரிய இருப்பின் அம்சங்களாவன – தகவல்களைத் தனிமைப்படுத்துதல் அல்லது தகவல்களை மறைத்தல், கட்டாய உழைப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் முதல் பயணக் கட்டுப்பாடுகள் வரை – இவையெல்லாம் அன்றாட வாழ்வில் மக்களிடையே ஆழமாகப் பதிந்துள்ளன. இருப்பினும், மூளைச் சலவையானது, ஆழமாக வேரூன்றும் போது, அவர்களின் தலைவர் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் நியாயத்தை ஒருவர் காணலாம். இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள் அல்லவா? எனது தலைமுறையினரின் மனங்களில் இதே மாதிரியான மனநிலைப்படுத்துதல் திணிக்கப்பட்டது எனலாம். இதில் வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், பிரபாகரனோ அல்லது அவரது அமைப்போ கூட மதிப்பீடுக்கும் விமர்சனத்துக்கும் உள்பட்டது என்பது என் தலைமுறையினர் பலருக்குத் தெரிந்து கூட இருக்கவில்லை.

## ‘சூரியக் கடவுள்’ பில்டப்

பிரசாரத்தைக் கையாள்வதிலும், முறையான மூளைச் சலவை மேற்கொள்வதிலும் பிரபாகரனின் புலிகளுக்கு இருந்த ஆற்றலைப் பார்த்தவர்கள் பிரபாகரன் ஒரு படிக்காத ஆளுமை என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். புலிகள் தங்கள் பிரச்சாரத்தை அனைத்து தளங்களிலும் முடுக்கிவிட்டனர். பிற போராளிக் குழுக்கள் துரோகிகளாக புலிகளால் முத்திரை குத்தப்பட்டு, அழிக்கப்பட்டன. மேலும், மாற்று சிந்தனை உள்ள அறிவுஜீவிகள் உள்பட பலர் புலிகளால் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளின் பிரசாரத்தால் பாதிக்கப்பட்டு, விடுதலைப் போராட்டத்தில் இத்தகைய நடவடிக்கைகள் அவசியமானவை என பெரும்பாலான தமிழ் மக்கள் நம்பினர். புலிகளின் இத்தகைய கொலை

வெறி ஆட்டங்கள் தமிழ் மக்களால் மன்னிக்கப்பட்டன.

## பிரசாரத்தின் கீழ் அட்டூழியங்களை பகுத்தறிவுப்படுத்துதல்

வேலுப்பிள்ளை பிரபாகரனின் தனிச் சித்தாந்தம் முழு இயக்கத்துக்குமான சித்தாந்தமாக மாற்றப்பட்டது. அவரது சிந்தனைப் போக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுகுள் மட்டுமல்ல் அவை தமிழ் இளைஞர்களுக்குள்ளும் அழுத்தமாகப் புகுத்தப்பட்டன. அக்காலத் தில் புலிகளின் ஆதிக்க பகுதியில் இருந்த சாதாரண ஒருவரின் 'சாதாரண' சிந்தனை செயல்முறையானது, ஒரு தீவிர விடுதலைப் புலி ஆதரவாளரின் சிந்தனையை ஒத்தது என்ற அளவுக்கு புலிகளின் பிரச்சாரம் இருந்தது.


விடுதலைப் புலிகளின் பிரசாரத்தின் வீரியத்தால், பிரபாகரன் ஒரு தலைவர் மட்டுமல்ல, ஒரு "சூரிய தேவன்", ஒரு "சூரியக் கடவுள்". கிட்டத்தட்ட வெல்ல முடியாத ஒரு மாய ஒளியைக் கொண்டவர் என்ற ஆழமான நம்பிக்கை எனது தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் மத்தியில் விதைக்கப் பட்டது. பிரபாகரனின் தலைமையின் கீழ் விடுதலைப் புலிகள் அடைந்த ராணுவ வெற்றிகள், யதார்த்தத்தை மீறுவது போல அவர்கள் படைத்த சாதனைகள் பிரபாகரனின் அந்தஸ்தை தெய்வீகமான மரியாதைக்குரிய ஒன்றாக உயர்த்தியது. பிரபாகரனின் முடிவுகளைக் கேள்வி கேட்பது மத நிந்தனைக்கு ஒப்பானது என்ற சூழலை புலிகளின் பிரசார இயந்திரம் ஏற்படுத்தியது. மத நூல்க ளின் பக்கங்களில் காணப்படும் சந்தேகத்துக்கு இடமில்லாத கீழ்ப்படி தலை பின்பற்றுமாறு பிரபாகரனை பின்பற்றுபவர்கள் வலியுறுத்தப்பட்டனர்.

## படித்த தொழில் வல்லுநர் களிடையே குருட்டு விசுவாசம்

விடுதலைப் புலிகளின் பிரசாரத்தின் செயல்திறன் என்னவென்றால், அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்திய கொடூரங்களைக் கூட நியாயப்படுத்தி மக்களை நம்ப வைத்தனர். புலிகள் அமைப்பில் இணைந்து உயிர் தியாகம் செய்த தமிழ் இளைஞர்களின் தியாகங்களை பயன்படுத்தி, புலிகளின் தலைமையின் மோசமான நடவடிக்கைகள் நியாயப் படுத்தப்பட்டன. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அமைப்புக்காக இழந்த ஆயிரக்கணக்கான இளம் உயிர்களில், தமிழர்கள் ஆழமான பாசம் கொண்டு ள்ளனர். இந்த பாசத்தை புலிகளின் தலைமை தவறாகப் பயன்படுத்தியது.

## விடுதலைப் புலிகளின் திறன் மிகுந்த தோல்விகளில் இருந்து கற்றல்

எவ்வாறாயினும், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த தமிழர்கள் கூட,



விடுதலைப் புலிகளின் வியூகங்களுக்கு எதிராக சிறிய வேறுபாட்டை கொண்டிருந் தால், அவர்கள் துரோகி என முத்திரை குத்தப்பட்டு கொல்லப்பட்டனர் என்பது கொடுமையான விஷயம். உதாரணமாக, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், 2006 ஆம் ஆண்டு, பிரபாகரன் மேற்கொண்ட நடவடிக்கை கள் முள்ளிவாய்க்கால் சம்பவம் போன்ற ஒரு பேரழிவை நோக்கி சமூகத்தை இட்டுச் சென்றதாகக் கூறுவது, ஒருவரை துரோகியாகக் கருதி கொல்ல போதுமா னதாக இருக்கும். எந்தவொரு விமர்சனத் தையும் நோக்கிய இந்த கொடூரமான நிலைப்பாடு, வெளிப் படையான உரையாடல் முடக்கப்பட்ட சூழ்நிலையை

உருவாக்கியது. மேலும், இது தவிர்க்க முடியாத வகையில், ஆயிரக்கணக்கான உயிர்களின் தேவையற்ற இழப்புகளை ஏற்படுத்தியது.

## விடுதலையடைந்த மனங்களின் எதிர்காலத்தைப் பார்க்கிறேன்

இங்கே திடுக்கிடும் விஷயம் என்னவென் றால், விடுதலைப் புலிகளின் உத்திகளின் அப்பட்டமான தோல்விகளுக்கு பிறகும், மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் போன்ற திறமையான நிபுணர்கள் உள்பட எனது தலைமுறையைச் சேர்ந்த பலர் அவர்கள் மீது கண்மூடித்தனமான நம்பிக்கையை வைத்துள்ளனர். அவர்களின் ஒருதலைப் பட்சமான நடைமுறைக்கு மாறான மற்றும் யதார்த்தமற்ற வாதங்களைக் கேட்கும்போது, நான் அடிக்கடி ஆச்சரியப் படுகிறேன்: இதுபோன்ற மூளைச்சலவை செய்யப்பட்ட எண்ணங்களை, பார்வை களைக் கொண்ட ஒருவர் எப்படி இவ்வ ளவு படிப்பறிவு மற்றும் அறிவாற்றல் கொண்டவராக இருக்க முடியும்?

இறுதியில், விடுதலைப் புலிகளின் மரபு மற்றும் தமிழ் இளைஞர்களின் போத னையானது, முழுமையான சித்தாந்தத்தின் அபாயத்தைக் காட்டுகிறது. மேலும், எந்தவொரு இயக்கத்துக்குள்ளும் வெளிப்படையான உரையாடல் மற்றும் சுய பரிசோதனை யின் முக்கியமான தேவையின் ஒரு சோகமான நினைவூட்டலாக நிற்கிறது. பிடிவாதத்தின் சங்கிலிகளாலும், விமர்சனமற்ற விசுவாசத்தாலும் மனித மனங்கள் கட்டப்பட்டால், உண்மையான விடுதலையை அடைய முடியாது. நாம் எதிர்காலத்தைப் பார்க்கும்போது, நமது கடந்த காலத்தின் படிப்பினைகளுக்குச் செவி சாய்ப்பது மிகவும் முக்கியமானது. உண்மையான சுதந்திரம் என்பது தனி நபரை சுதந்திரமாகவும், விமர்சன ரீதியா கவும் சிந்திக்க அதிகாரமளிப்பதில் வேரூன்றியுள்ளது என்பதை அங்கீக ரிப்பது. என் கருத்துப்படி, சங்கிலிகளால் பிணைக்கப்பட்டது போன்ற எண்ணங் களை கொண்ட மக்களை நீங்கள் விடுவிக்க முடியாது.

உண்மையான விடுதலைக்கான பாதை யானது, கேள்வி கேட்கும் மனங்கள், ஏகப்பட்ட கதைகளை எதிர்கொள்ளும் தைரியம் மற்றும் பலதரப்பட்ட முன்னோ க்குகளை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்வதன் மூலம் அமைக்கப் பட்டுள்ளது. குறைந்தபட்சம், இது மிகவும் தேவையான சில சுய-பிரதி பலிப்புக்கான தொடக்கப் புள்ளியாக இருக்கலாம்.

**நன்றி- ஜாப்னா மொனிட்டர்**

“நோக்கு”, தமிழில் ஒரு புது முயற்சி. நேர்மையான தமிழ் இதழியலை கொண்டுவர வேண்டும் என்ற ஆவலில் இந்த இதழை தொடங்கியுள்ளோம். காத்திரமான, ஆழமான கட்டுரைகள் இந்த இதழில் வெளியிடப்படும்.
Jaffna Monitor- இதழில் வெளியாகும் கட்டுரைகளின் தமிழ் வடிவம், இந்த இதழுக்காக எழுதப்படும் பிரத்தியேகமான கட்டுரைகளும் “நோக்”கில் இடம்பெறும்.

தொடர்பு : jaffnamonitortamil@gmail.com